

# தாய்

## தில்லைச்சிவன் கதைகள்

கனப்பொருத்தமான

**கண்ணாடிப் பாண்டங்கள்**

**L.G.F**

இலங்கைத் தயாரிப்பு

★ லாம்புச் சிம்னிகள்

★ கண்ணாடித் தம்ளர்கள்

★ மண்ணெய் அடுப்புப் போத்தல்கள்

வெவ்வேறு தினிசுக்களில் உள்நாட்டுத் தேவைக்கென உற்பத்தி செய்யப்பட்டவை.

இப்பொழுது சந்தையில் வாங்கலாம்.

**லங்கா கிளாஸ் பாக்டரி**

உப்புவெளி,

திருகோணமலை.

போன்: 435


# தாய்

## தில்லைச்சிவன் கவிதைகள்


கவிஞர்:

தில்லைச்சிவன்



அன்பு வெளியீடு

முதற்பதிப்பு: டிசம்பர் 1969.
அன்பு வெளியீடு
உரிமை: ஆசிரியருக்கு
விலை ரூபா 2-00

# THAI

( A COLLECTION OF TAMIL POEMS )

*Author* :

T. SIVASAMY
[ Thillaisivan ]

*Publishers* :

ANPU VELIYEEDU
JAFFNA

*First Edition* : Dec. 1969

Price Rs. 2/=

*With the best*

*Compliments*

*of*

**S. T. R. Salay Mohamed & Co.**
245, Main Street
**Colombo - 11**

Grams : "PERDESHI"   Phone : **20536**

FOR KEEN SIGHT

consult the sight specialists



**RAY BAN OPTICIANS**

40, Maliban Street

**Pettah**

Phone: 27003

**CHEAPEST HOUSE**

For

Enamelware

Glassware

Exercise books

Sundry goods.

**SAMEEM STORES**

No. 186, 188, Prince Street

**Colombo-11**

*With the best Complimemts*

*of*

## Taylor & Mackay Ltd.

Ship Chandlers, Importers & Exporters

2nd Floor. Gaffoor Buildings

**Colombo-1**

Telegrams: "NAGMEER" Colombo
Telephone: Nos. 23870, 25721
" Nos. 34782, 91962 (Night)

## A. M. NAGOOR MEERA SONS & CO. LTD.

**ADMIRALTY CONTRACTORS**

SHIPCHANDLERS, STEVEDORES, IMPORTERS
EXPORTERS, AND ANIMAL DEALERS.

LLOYDS BUILDING
PRINCE STREET
**FORT, COLOMBO-1.**

Telephone: 23870, 25721
Night: 91962

## JohnHagenbeck&Co.Ltd.

SHIP - CHANDLERS,
STEVEDORES, EXPORTERS,
IMPORTERS.

LLOYD'S BUILDING,
PRINCE STREET
COLOMBO, CEYLON

Telegrams:
JOHNHAGEN-Colombo

Telephone: 3870
" 34782 (Night)
Telegrams: "MOHISHIPCO"
P. O. Box 284

## E. H. M. Mohideen & Co.

Ship Chandlers & General
Merchants, Provisions of Every
Description & Fresh Water
Supplied at the Shortest Natice

LLOYDS BUILDING
PRINCE STREET
FORT, COLOMBO

LARGE OR SMALL
BY LAND OR SEA OR AIR
LET US SOLVE
YOUR CLEARING AND FORWARDING PROBLEMS

THE WHARF DEPARTMENT

**Colombo Agencies Ltd.**
P. O. Box 913
159, Dharmapala Mawatha    Telephones: 25413-14
Colombo-7

அன்பளிப்பு

**அம்பிகை குமரன் ஸ்ரோர்ஸ்**
238, காஸ் கொம்பனி வீதி
கொழும்பு

*With the best Compliments of*

**The Gulistan Hardware Stores**
65, Third Cross Street
**COLOMBO-11**

Phone: 20720 (4 Lines)    Grams: 'ZAINSTAN'

**INSIST ON:**
"CONTEX"-10-HANDOPERATEDCALCULATORS
"CONTEX"-30X55-ELECTRICALLY OPERATED CALCULATORS
AND
"OPTIMA"-TYPEWRITERS

★

**AGENTS:**
**JAFFERJEE BROTHERS**
150, St. Joseph's Street
**Colombo-14**
Telephone: 32051 (4 Lines)

அன்பளிப்பு

**எஸ். பீ. சாமி அன் கோ.**

68, 4-ம் குறுக்குத் தெரு

கொழும்பு-11

போன்: 22640

**யூனைட்டெட் மேர்ச்சன் லிமிட்டட்**

71, பழைய சோனக தெரு

கொழும்பு-12

போன்: 32822

## தவப்பயன்

பிறப்பினுக் கெல்லாம் பெரியதாம் மனிதப்
    பிறப்பினை எடுத்ததுந் தவமே
குறைப்படற் கின்றி நலனெலா மமையக்
    கொண்டபே ரெழிலுமெந் தவமே
நிறைப்படக் கல்வி ஞானமும் அறிவும்
    நேர்ந்ததும் தவத்தது நிறைவே
சிறப்புடைக் குறள்வாழ் செந்தமிழ்க் குலத்து
    சேர்ந்ததெம் மாதவப் பயனே.

# வெளியீட்டுரை

"ஆளை யடிமை கொளும் அரசபணி வெறுத்தொதுக்கும்" சரவணையூர்க் கவிஞர் தில்லைச்சிவன் யாத்த கவிதைகளைத் "தாய்" என்னும் நூலாக வெளியிடுவதில் மிக மகிழ்கின்றோம்.

சீர்திருத்த எண்ணமும், தமிழ்ப் பற்றும், வீறுடன் தன்னுள்ளடக்கிய கவி. ஏன் பேனா உணர்ச்சியை — தமிழ் உணர்ச்சியை — தனக்கே யுரித்தான தனித்தன்மையுடன் கவிகளாக்கியுள்ளன. நாலுவரி எழுதிவிட்டால் கவிதையெனத் தானே தன்னைக் கவிஞனாக்கி மகிழும் இக்கால கட்டத்தில், பல ஆண்டாய்ப் பல கவிதைகளை அமைதியாயிருந்தெழுதி தமிழ்த் தொண்டாற்றும் தில்லைச்சிவனை தமிழ் கூறும் நல்லுலகறியும் அன்னாரின் கவிதைகளைப் படித்தோம். 'தமிழ்க்கவிதை' களைப் படித்த நிலையமைந்தது; ………… அதனால் வெளியிட்டோம் —

தில்லைச்சிவன் பேனா வாழும்பேனா! ஏனெனில் அப்பேனாவில் கவித்துவமை மட்டுமே ஊறுகின்றது.

இது உண்மைதானா?...............

இதோ! "உங்கள் கரங்களில் 'தாய்' ..................... பாடுங்கள்; பின்பு 'உண்மை உண்மை' எனக் குரல் கொடுப்பீர்கள் —"

550/7, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்
23-10-69

"அன்பு வெளியீடு"

### இரசிகமணி, கனக. செந்திநாதன்

### அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

கவிஞர் தில்லைச்சிவனின் இரண்டாவது கவிதைத் தொகுதி தாய். 1961ஆம் ஆண்டில் கவிதைக்கன்னி என்ற கவிதைத் தொகுதியை இவர் அளித்துள்ளார். எட்டு வருடங்களின் பின் 'கன்னி' 'தாய்' ஆகத் தானே வேண்டும். எஸ். எஸ். ஸி. படித்துக்கொண்டிருக்கும்போதே பட்டணத்து மச்சினி என்ற அழியாப் புகழ் பெற்ற கவிதை மூலம் எழுத்துலகுக்கு வந்தவர் தில்லைச்சிவன். 'பட்டணத்து மச்சினி'யின் தரமறிந்து தமது மறுமலர்ச்சிப் பத்திரிகையில் பவனிவரச் செய்த தி. ச. வரதராசன், கவிதைக்கன்னிக்கு முகவுரை எழுதுகையில் "தில்லைச்சிவன் கவிதைகள் அவ்வளவும் உயிருள்ள கவிதைகள். அவற்றில் கற்பனைகள் இனிக்கும்; காதல் துள்ளும்; உணர்ச்சி கிளுகிளுக்கும்; தமிழ் மணக்கும்." என எழுதியுள்ளார். 'தாய்' என்ற இத்தொகுதியில் மேற்படி அம்சங்கள் பண்பட்டு இன்னும் மெருகேறி ஒளிவீசுகின்றன என்பது உண்மை.

சிதறு பூப்போல் இத்தொகுதியில் பாடல்கள் — நாற்பதுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் — அமைந்திருந்தாலும்; தேசம், தமிழ், அழகு, காதலும் குடும்பமும், பெரியோர்கள், கதைப்பாடல் என்ற ஆறு பிரிவுகளில் இவற்றை அடக்கலாம். இந்த ஆறு பிரிவுகளில் காதலும் குடும்பமும் என்ற பகுதிதான் விஞ்சி நிற்கிறது. பதினான்கு தலைப்புகளில் — பல கோணங்களில் — அவர் அதைப் பாடியுள்ளார். தில்லைச்சிவனின் காதற் பாட்டுகள் 'வெறும்கொப்பி'க் கவிதைகள் அன்று. அவருக்கு உரித்தான 'பாணி' ஒன்று இருக்கிறது. அதைச் சுருக்கமாகச் சொன்னால் பட்டணத்துத் தெருவில், பட மாளிகையில் படிக்கும் கல்லூரிகளில் தோன்றும் காதலல்ல அவர்கள் காதல். சின்னஞ்சிறு கிராமத்தில் இயற்கையான சூழ்நிலையில் முறையான காரணத்தோடு தோன்றும் காதல்தான் அவருடையது. அதைச் சொல்லும்விதமும் ஆபாசம் கலவாதது. இதனால்தான் தில்லைச்சிவன் உயர்ந்துநிற்கிறார்.

தில்லைச்சிவனின் காதல் துள்ளலை, உணர்ச்சிக் கிளுகிளுப்பை இந்தப் பதினொன்கு தலைப்புக்கள் கொண்ட பாடல்களில் பல இடங்களில் காணலாம். ஆனால் இரண்டு இடங்களை மட்டும் தொட்டுக் காட்ட விரும்புகிறேன். "சிறுமியாய் இருந்தபோது தன்னுடன் விளையாடிப் பொய்க் கோயங்கள் காட்டியவள் இன்று பெரியவளாகித் தன்னைக் கண்டதும் ஒளித்துக்கொள்வது ஏன்?" என்று கேட்கிறார் கவிஞர். ஏதோ உன் உள்ளம் என்ற கவிதையில் அவர் பாடுவதைப் பாருங்கள் :—

"தொட்டில் அசைத்திடத் தூளிகை கேட்டாய்
  தோரண மாய்ஆலின் விழுதை அமைத்தேன்
பட்டுத் துணியினால் சுற்றிய கற்சேய்
  பள்ளிகொள் ளெனப் பாட்டும் இசைத்தேன்
வட்டில் எனஆலின் இலையை எடுத்து
  வார்த்தபொய்க் கூழினை உண்டு களித்தேன்
மெட்டி ஒலிக்க அணைகுவை இன்றோ
  மெல்லெனப் போயின் ஒளிக்குதல் நன்றோ"

ஆலம்விழுதால் தூளிகை கட்டுவதும், கற்சேய் பள்ளி கொள்ளப் பாட்டுப் பாடுவதும், வட்டில்என ஆலின் இலையை எடுத்து வார்த்த பொய்க் கூழினை உண்டு களிப்பதும் அசற் கிராமத்துச் சிறுவர் விளையாட்டுகள், தில்லைச்சிவனின் ஆழ்ந்த அனுபவ உணர்ச்சி கவிதையாகப் பீறிடுகிறது மனதைக் கிளுகிளுக்க வைக்கிறது.

அத்தானைக் காத்திருக்கும் கிராமத்து நங்கை தனக்கே உரித்தான 'கொச்சை' மொழியிலே பேசுகிறாள். கிராமத்து மொழி தில்லைச்சிவனின் பாடல்களில் உயிர்ப்போடு விழுகிறது.

"வெட்டிப் பிளவெடுத்து வெத்திலையும் காம்புநுள்ளிக்
கட்டித்தூள் மணஞ்சேர்த்துக் கைநிறையக் கொண்டு
வந்தேன்
செட்டிமகன் இவ்வளவும் செய்வதென்ன? கொடு
கொடுக்கக்
கொட்டும் பனிக்கூதல் கொஞ்சமும் தெரியலையா?

எளிமை, அழகு, ஆழம், உண்மை, உணர்ச்சி என்றெல்லாம் கவிதைகளுக்கு இலக்கணம் கூறுகிறார்களே. தில்லைச்சிவனின் இந்தப் பாடலில் எதுதான் இல்லை.

வெறும் காதற் கவிதைகள்தானே என்று முகம் சுளிக்கும் அன்பர்களுக்கு வீரம் காத்திருக்கிறது. தருமயுத்தம் என்ற ஒரேயொரு கதைப் பாடலில் வீரம் கொப்புளிக்கிறது. கைமுனு எல்லாளனை வென்ற கதைதான் தருமயுத்தம். எல்லோருக்கும் தெரிந்த கதைதான். ஆனால் தில்லைச்சிவனின் விருத்தங்கள் ஆற்றொழுக்காய் அமைந்து வாசிக்கத் தூண்டுகின்றன. இன்னொரு விசேடம் கைமுனுவையும் எல்லாளனையும் ஓரக்கண்பார்வை பாராமல்—தராசு முனையில் நிறுத்திப் பாடியுள்ளார். கைமுனு வீர சபதம் செய்வதைப் பாருங்கள் :-

"தாய்த்திரு நாட்டின் பூட்டைத்
தகர்த்துடைத் தெறியா தோய்ந்து
போய்த் துயில் கொள்ளேன்; இன்பம்
புல்லிடேன்; அமுதைச் செந்தேன்
தோய்த்தெடுத் தடினும் உண்ணேன்
தோழரே! இவைசெய் வேனால்
நாய்ப்பிறப் பெடுத்துச் சூழும்
நரகெல்லாம் அலைவே னாக!

இந்தப் பாடல்களை எல்லாம் படித்துப் பார்த்தபோது நமது பாடப் புத்தகங்களில் இவை பவனி வந்து மாணவர் வாயூற—மனங்குளிரப் படித்தால் என்ன? என்ற எண்ணம்தான் எனக்குத் தோன்றியது. தாம் பிறந்த தேசத்தைப் பாடாத கவிஞர்கள் இல்லை. தாய்நாடு மகாவலி, ஈழம் புகழ்பாடல் எந்நாள், என் ஊர் என்ற தலைப்புகளில் இக்கவிஞரும் பாடியுள்ளார். சில மனிதருக்கு—ஏன் சில எழுததாளருக்கே—நமது நாடு, நமது நாட்டு எழுத்தாளர்கள்—நமது கிராமங்கள்—நமது வாழ்க்கைமுறை ஒன்றுமே பிடிப்பதில்லை. கவிஞர் தில்லைச்சிவன் பாடியுள்ள 'என் ஊர்' நிச்சயம் இவர்கள் கண்களைத் திறக்கும். 'பட்டண வாசத்தில்' இருந்து கொண்டு 'கிராமத்து மண் வாசனை' தோன்ற எழுதுகிறோம் என்று நடிப்பவர்களின் கண்களை இது நிச்சயம் திறக்கும்.

"ஆடுதுலா மரம்மீது ஆணழகன் ஏறிநின்று
ஓடிமிதித் துதைத்த உடல்வாதை தான்மறக்கப்
பாடிக் களித்துவிசில் பண்ணிக்கும் மாளமிட்டும்
வேடிக்கை யோடுபயன் விளைக்கு மெங்கள்சரவணையூர்!

காதல்—வீரம்—சிற்றூர் இவைகளைப் பார்த்துவிட்டீர்களா? தில்லைச்சிவன் பாரதி, நாவலர், வன்னியசிங்கம், அறிஞர் அண்ணா முதலிய பெரியோர்களைக் காட்டியுள்ளதையும் படித்துப்பாருங்கள். ஆனால் அவர் தமது அயலைச் சார்ந்த வேந்தனார், தில்லைநாதப் புலவர்,

பொன் குமாரவேற்பிள்ளை முதலியோரைப் பாடியுள்ளதிலேதான் என்மனம் குளிர்கிறது. வேந்தனாரைப் பற்றிய பாடலில் அவரது ஆற்றலைச் சரியாகத் தொட்டுக் காட்டியுள்ளார் கவிஞர்.

"சொந்தமொரு முயற்சியினால் தமிழைக் கற்று
துலங்குமருட் பெருங்குணத்தால் உலகிற் செல்லாம்
தந்தகவி 'அம்மா' இந் நாட்டின் செல்வத்
தமிழ்ச்சிறுவர் மழலையெலாந் தவழ வைத்தாய்"

என்ற பாடல்தான் உண்மையான வேந்தனாரைக் காட்டுகிறது. ஆனால் 1930-1940-க்கு இடையில் புகழ்பெற்ற எழுத்தாளராகி, அமரரான பொன் குமாரவேற்பிள்ளை அமுதசுரபிஎன்ற அழகான மாதப் பத்திரிகையை அக்காலத்தில் நடாத்தியதையும் அவர் பாடலில் தொட்டுக் காட்டியிருத்தல் வேண்டும்.

தில்லைச்சிவனின் தமிழ்ப் பற்றுப்பற்றி நான் சொல்லவேண்டியதில்லை. 'ஆரியத்தைக்' கொஞ்சம் கடுமையாகத் தாக்கி எழுதியிருக்கும் பாடலில் இருந்தே நீங்கள் அதை அறிந்துகொள்ளலாம். அந்தநாள் — சதிர் என்ற பாடல்கள் கவிஞரின் வெற்றிகரமான பாடல்கள் அந்நநாள் என்ற கவிதை முதுகவிஞராய் இருந்து மறைந்த யாழ்ப்பாணனின் 'மாங்காய்க்குக் கல்லெறிந்து' என்ற பாடலகளை நினைவூட்டினாலும் சில பாடல்களில் தனித்த முத்திரையைப் பொறித்திருக்கிறார் தில்லைச் சிவன்.

செம்மணற்றிக் காட்டில் செவ்விளநீர் பறித்தருந்திப்
பொம்மன் கிணற்றிலதைப்போட்டுவிட்டு அவன்வளவில்
வெள்ளரியின் பிஞ்சையெலாம்வேண்டுமட்டும் நாம்பிடுங்கிப்
பள்ளிவரப் பட்டஅடி பாடின்அந்நாள் வாராதோ?

தில்லைச்சிவனின் பாடல்களைப்பற்றி இன்னும் எவ்வளவோ சொல்ல ஆசைதான், ஆனால் அவர் "ஐந்து பக்கங்கள்தான் உமக்கு" என்று சொல்லிவிட்டாரே. சிவனின் கட்டளையை மீற நம்மால் முடியுமா?

தில்லைச்சிவனின் பாடல்களிற் சில நின்று நிலைக்கும் என்பது உறுதி.

# என்னுரை

கவிதை பாடத்தான் வேண்டும் — பாடாமல் இருக்க முடியாது. இப்படியொரு கட்டாயம்.

பாட்டு எழுதுவதில் ஏற்படும் மகிழ்ச்சி — படைப்பின் களிப்பு; இதற்காகப் பல பாடல்கள். நான் சுவைக்கும் கவிஞர்களின் பாடல்களால் என்மன உணர்ச்சிகள் மோதியெழும் போதெல்லாம் அவற்றை வெட்டியும் ஒட்டியும் எழும் கவிதைகள் மிகப்பல. நண்பர்களின் நச்சரிப்புக்காகச் சில. இப்படிக் கவிதைகள் பாடிக்கொள்வது எனது ஒரு பகுதி நேரத் தொழில்.

இந்தத் தொழிலுக்கேற்ற கருவிகள் என்னிடம் இல்லை. இக்கருவிகளைத் தேடிக்கொள்ளும்படி சில நண்பர்கள் கூறிய போதிலும், ஏனோ எனக்கு அதில் ஆர்வம் ஏற்படவில்லை. எனவே, எனது கவிதைகள் வெறுஞ் சுண்ணமும் நீரும் கல்லும் மண்ணுங் கொண்டு, கருவிகளின் நிருக்கையாற் சமைத்த கட்டிடம் போன்று, ஒழுங்கு — அழுத்தம் என்பன அற்றதாய் இருக்கலாம். ஆனால் திணிவுடைய இறுகிய உதாரமான கவிதைகளாய் இருக்கும் என்பது எனது எண்ணம்.

இவ்வெண்ணத்தின் தடிப்பு உங்கள் கையில் நூலாக இருக்கின்றது.

இந்நூலில் உள்ள கவிதைகளிற் பல ஒவ்வோர் சமயத்தில் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்தவைதாம். இவற்றைத் தொகுத்து நூலாக்கித் தர உதவிய நண்பர்கள் பலர். அவர்களை என் நெஞ்சத்துள் நிறுத்தி வாழ்த்துவதுடன் அழகிய முகப்போவியம் வரைந்துதவிய ஓவிய அன்பர் ரமணி, முன்னுரை வழங்கிய இரசிகமணி அவர்கள், அச்சிட்டுதவிய விவேகானந்த அச்சக உரிமையாளர்கள் — ஊழியர்கள் இந்நூலை வெளியிட முன்வந்த அன்பு வெளியீட்டினர் எல்லோருக்கும் எனது அன்பின் வணக்கங்கள்.

சுவைஞர்களே!

உங்கள் கையிலிருக்கும் கவிதைகளைப் பாடுங்கள் — ஒன்றல்ல, இரண்டல்லப் பலமுறை பாடுங்கள் — உரத்துப் பாடுங்கள்.

உங்கள் உள்ளக் களிப்பு எனது உழைப்பின் பயன்.

வாழ்க தமிழ்

"கூடல்"
சரவணை — வேலணை
8-11-69

தில்லைச்சிவன்

## படையல்

எழுத்தணிசொல் பொருள்யாப்பு
இன்னவென அறியாயான்
பழுத்தபெரும் புலவர்களின்
பாடல்களைச் சுவைத்தவைபோல்
தொடுத்தஇவை "கவிகளென"த்
தோன்றாத துணையாகி
எடுத்தெடுத்துத் தந்தவளை
எண்ணியிந்நூற் படையலிட்டேன்.

# பொருளடக்கம்


| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | தாய் | ... | ... | 1 |
| 2. | தாய்நாடு | ... | ... | 5 |
| 3. | காலைக்கதிர் | ... | ... | 7 |
| 4. | வாடை | ... | ... | 10 |
| 5. | நர்த்தனம் | ... | ... | 12 |
| 6. | மகாவலி | ... | ... | 14 |
| 7. | தை | ... | ... | 15 |
| 8. | செங்கதிர் | ... | ... | 17 |
| 9. | வசந்தவிழா | ... | ... | 19 |
| 10. | கவிதை | ... | ... | 21 |
| 11. | பாரதி நினைவு | ... | ... | 23 |
| 12. | நாட்டுக்கொரு நாவலர் | ... | ... | 25 |
| 13 | வன்னியசிங்கம் | ... | ... | 26 |
| 14. | காலா உனக்கு ஐயோ | ... | ... | 28 |
| 15. | ஈழம் எமது நாடு | ... | ... | 30 |
| 16. | புகழ் பாடல் எந்நாள் | ... | | 32 |
| 17. | ஆரியம் | ... | ... | 34 |
| 18. | இளைஞர் பாட்டு | ... | ... | 39 |
| 19. | அந்தநாள் | ... | ... | 40 |
| 20. | சதிர் | ... | ... | 42 |
| 21. | என் ஊர் | ... | ... | 44 |
| 22. | அத்தை | ... | ... | 46 |
| 23. | கதை சொன்ன கவிதை | ... | ... | 47 |
| 24. | தாபம் | ... | ... | 49 |
| 25. | ஏதோ உன் உள்ளம் | ... | ... | 52 |

பக்கம்


26. கட்டியொரு முத்தமளியே ... ... 54
27. முடிவு என்ன ... ... 56
28. நெடுவழி ... ... 61
29. வாழ்வரசி வந்தாள் ... ... 63
30. மச்சாள் ... ... 65
31. தில்லைநாதப்புலவர் ... ... 72
32. வேந்தனார் ... ... 74
33. தமிழ் உயிர்ப்பதுவும் ... ... 76
34. நலன் புனைவு ... ... 78
35. பிரியாவிடை ... ... 81
36. திருமண வாழ்த்து ... ... 83
37. தரும யுத்தம் ... ... 84
38. என்றுமுள தென்தமிழ் ... ... 105


# தாய்

மலருள் நிறைந்து ''மணம்'' என்று புகழ்பரப்பி ,
நிலவில் ஒளியாகி நெருப்பிடையே வெம்மையதாய்ப்
பழகு தமிழ் இசையில் பாய்ந்தினிமை பயந்தழகு
மழலை மொழியில்''இன்ப மயக்கம்''என்ற பேருடையான்

வீரர்திருத் தோளில் வேளாளர் ஏர்முனையில்
காரிற் றொழிலாளர் கரங்களிலும் குடியிருப்பான்
பாரு ளுயர்ந்தநல்ல பண்பாளர் உள்ளத்தில்
நேருக்கு நின்றருள் நிர்மலனென் பாரவனே.

அறிந்தவர்க ளில்லை அனுபவியார் யாருமில்லை
தெரிந்தம்' என்பார் கண்டதில்லை சேர்நெறியொன் றில்லைநோய்
வருத்திடும்போ தின்மருந்தாய் வந்திடுவான் யான்தனித்து
இருந்திடும்போ தென்னெஞ்சில் இன்பவனு பவந்தருவான்.

கண்ணன்என்பர் 'கர்த்தர்' என்பர் கருணைதவழ் அல்லா
விண்ணுலகை யாளும் வேந்தன்என்பர் 'புத்தன்' என்பர்
எண்ணி லடங்காத எத்தனையா யிரம்பெயரால்
இன்னு முரைத் தழைத்தும் எவரவனைக் கண்டார்கள்?

காணு திருந்தெனது கடுகுளத்தில் அணுமின்னாய்
வீணைகா னஞ்செய் வித்தகனே கண்கண்ட
தெய்வம்என் தாய்மேல் தீந்தமிழ்நற் கவியெழுதி
உய்ய நினைத்தேன்யான் உன்னருளாம் கையளிப்பாய்

பாலிற் படுநெய்போல் பாவலர்தம் நெஞ்செழுந்த
நூலிற் பொருளாய் நுகர்வோர் பெறுபயனே!
ஆலித் தலையும் அலைசூழ் உலகிலருள்
பாலித் தெனைதன்னைப் பாட்டுவரக் காத்தருள்வாய்!

''அன்னை தனி லினியை''யென ஆயிரமா யிரம்பெயரால்
நின்னை வழுத்தி நினைந்துருகிப் பாடுமென
தன்னை தனதன்புக் காளாகி னேனதனைப்
பண்ணிக் கவிதைசில பாடவருள் தாராயோ?

'உத்தமனுன் பிள்ளை'யென ஊரார் சொலக்கேட்டுப்
பெற்ற பொழுதின் பெரிதுவக்கு மன்னைதனை
வைத்துக் 'கவி'யென்றென் வாய்குளற அதன்நிறைந்த
சத்துப் பொருளாகித் தாங்குமிறை வாழியவே!



பெற்றெடுத்துப் 'பிள்ளை'யெனப் பெரிதுவந்து தலைமோந்து
மெத்தையிட்டு மலர்பரப்பி மெல்லணையிற் றான்வளர்த்தி
சித்தந் துணர்வையெல்லாஞ் சேர்த்துமுலைப் பாலூட்டி
சத்திதருந் தாயின் தண்ணளியைப் பாடீரோ!

கத்தும்போ தெழுந்து "கண்ணேறு பட்ட"தெனச்
சித்தம் துடித்துச் சிலஎடுத்துச் சிரசிலிட்டுப்
பத்தியந்தா னுண்டுமுலைப் பாலால் உயிர்வளர்த்த
உத்தமியெம் தாயாரை உயிர்த்தவிசில் ஏற்றீரோ!

குந்தவைத்துச் 'சப்பாணி கொட்டு'எனப் பாட்டிசைத்து
பந்தெடுத்துத் தந்து பம்பரத்தை ஆட்டிவிட்டு
எந்திரப் பொம்மைகளை எம்முன்னு லாடவிட்டு
சந்தத் தமிழ்இசைத்துத் தாலாட்டுச் சொன்னவள்தாய்

புத்தம் புதுஆடை பொன்னணிகள் பூட்டிமகிழ்
முத்தஞ் சொரிந்துதினம் முன்தூக்கிக் கண்ஒற்றி
முத்துச் சிரிப்புதிர்க்க மோகித் தணைத்துநெஞ்சில்
வைத்தூஞ்சல் ஆட்டி வாழ்த்திடுவாள் தாயவளே

வானத்து அம்புலியை வண்ணமயில் கிள்ளைமுயல்
மோனத்தெழிலையெல்லாம் முன்னழைத்துப் பிள்ளைகட்கு
ஊணைத் தருந்தாயாம் உத்தமியைச் சித்திரித்து
ஞானக் கவிதைசெய்து யாம்பாட வேண்டாமோ?

குத்திக் குளறிக் குறும்பு பலசெய்து
தத்தித் தளர்நடையால் தள்ளாடிப் பாவிவர
மெத்தமகிழ்ந் தெம்மை மேலெடுத்துத் தோள்மீது
வைத்தாடு மன்னைதனை வாழ்கவெனப் பாடோமோ?

பத்துத் தனித்திங்கள் பாடுபட்டுப் பெற்றெடுத்து
கத்தும்போ தெல்லாம் கடவுளரைக் கைதொழுது
சொத்தை அளித்துச் சுகமளித்துங் பல்கலையாம்
வித்தைபெற வாழ்த்தி விரதம் இருந்தவள்தாய்

ஆடித் திரிந்தெங்கள் அழகுடலில் தூசுதொட்டு
வாடிவரக் கண்டோடி வந்தணைத்து முத்தமிட்டு
ஆசையுடன் நீராட்டி அழுக்ககற்றி அழகு செய்யும்
தாயைப் புகழ்ந்தேத்தித் தமிழ்செய்து பாடுவமே!

வீரன் அருச்சுனனும் வில்லாளன் கன்னனுஞ்செய்
போரின் திறங்கூறிப் பொன்றிடினும் நன்றிகொல்லாத்
தீரம் வியந்து ‘செயற்கரிய செய்தமனுச்
சோழன்’ எனஎம்மைச் சொல்லிமகிழ் வாள்அன்னை.

பள்ளிக்கு வைத்தங்கு படித்த‘அம்மா’ப் பாட்டதனைச்
சொல்லக்கேட் டோடிவந்து துரத்திப் பிடித்திதமாய்
மெல்ல அணைத்தமுத முத்தமழை சொரிந்து
உள்ளங் களிகொள்ள உவந்திடுதாய் வாழியவே!



# தாய் நாடு

என்னாடு ஈழமணித் திருநாடு
என்றிடில் உள்ளத்தில் இன்பத்தே னூறு
பண்ணோடு இசைபாடிப் பாயுமப் போது
பாவினிற் போற்றிப் பரவல்தான் தோது
விண்ணாட்டுத் தேவரும் விரும்புமிந் நாடு
விருந்தளித் தேதினம் உவந்திடும் நாடு
பொன்னாடு மாவலி யோடுபல் ஆறு
புரந்து வளந்தரும் ஈழநன் நாடு.

சிங்களஞ் செந்தமி ழாமிரு மொழிகள்
சேர்ந்து ஒளிதரத் திக்கெட்டும் வாழ்த்த
கொங்கலர் இன்மலர்ச் சோலைகள் தோறும்
குயில்க ளிசைத்திட மயில்கள் நடிக்க
பங்கயச் செவ்விதழ்ப் பாவையர் எங்கும்
பள்ளிசை யால்நெற் பயிரை வளர்க்கச்
சங்கீன்ற வெண்முத்துப் பொங்கு நலஞ்சேர்
சாகரஞ் சூழ்ஈழ நாடெங்கள் நாடே.

புத்தன் அருளாலும் முப்புரஞ் செற்ற
புனிதன் அருளாலும் புகழுற்ற நாடு
முத்தும் அரிசியும் மற்றவர்க் கீய்ந்து
முன்னீர்த் திரைவந்த பல்பொருள் கொண்டு
வித்தை பலகற்று வீரர்செந் நீரால்
விழைவுற்ற சுதந்திரப் பயிர்கொள்ளும் நாடு
அத்தனும் அம்மையும் வாழ்ந்தெமை ஈன்றே
ஆனந்தங் கொண்டொளிர் ஈழத்தாய் நாடே





# காலைக்கதிர்

மடல்வி ரித்து மலர்கள் இன்ப
மணம்ப ரப்பி ஆடுது
கடல்எ ழுந்து அலையெ றிந்து
காலை இசை பாடுது.

கொக்க ரக்கோ என்று சேவல்
கூரை மேல கூவுது
தொக்கி நின்ற இருட்தி ரையைத்
தூக்கி வானம் வீசுது.

வெள்ளி யாறு ஒன்று வான
வீதி யெங்கும் ஓடுது
துள்ளிப் பாய்ந்து தங்கச் சேற்றுள்
தோய்ந்து சுளி போடுது.

ஆனை மாடு ஒட்டை சிங்கம்
அண்டர் மேலுலா விப்பின்
பூனை யாகித் தேய்ந்தி ருந்து
போகும் விந்தை காண்மினோ.

மேகப் பஞ்சுப் பொதியிற் பொன்னின்
மின்னற் கீற்றுப் பாயுது
காகம் கொம்பி லேறிக் குந்திக்
"காகா" வென்று கரையுது.

வானம் கடலைக் கூடு மிடத்தில்
வந்து செந்தீ மூளுது
கானம் பாடிப் பட்சி ஜாலம்
ககன மீது ஏறுது.

இருள்அ ரக்கன் உடல்கி ழித்து
இருத யத்தைக் கொண்டுமேல்
வருதல் போல வான மூலை
வந்து பரிதி நோக்கினான்.

தங்கத் தட்டம் ஒன்று வானில்
"தகத கென்று" ஒளியுடன்
தொங்கி டுதல் போலக் கீழ்வான்
சூரியனும் தோன்றி னான்.



நீல வண்ணன் கையிற் சுற்றும்
நித்தில வெண் சக்கரக்
கோல மன்ன பரிதி விண்ணைக்
குலவி மேல வந்தனன்.

வர்ண ஜாலம் புரிந்த தூய
வானம் அந்த மருங்கெலாம்
மர்ம ஜாலம் புரிந்து அன்பில்
மலர்ந்த திந்த உலகெலாம்.



## வாடை

வடதிசை நின்று 'ஒய்'யென வாடை
வந்திங்கு வீசாதோ
கடல்எ ழுந்தலை ஓம்ஓம் என்று
கரைந்திடிற் கேளாதோ?

பரியலை யாயிரம் பாய்ந்து வரக்கடல்
பம்மி எழும்பாதோ
கரியென ஒட்டையென் றேமேகம் வானத்தைக்
காடாக்கிக் காட்டாதோ

''கட்டக் கடபுட'' மேகம் குமுறிக்
கர்ச்சிக்கக் கூடாதோ
வெட்டி யிருளைப் பிளந்தொளி மின்னல்
வீசி யடிக்காதோ



''கொடுகொடு'' வென்று கூத லடிக்கக்
கூசி நடுங்கேனோ
''சடசட'' வென்ன மரங்கள் முறிந்திடும்
சத்தமா ராட்டாதோ

திகில்மி குத்த பயமகிழ் வொன்று
தேக்கிட வென்னுளத்தில்
அகில்ம ணத்துடன் வாடை தருமந்த
ஆவணி வாராதோ

'கூ'வெனச் சோலை எங்கணும் வாடை
கூவிக் களியாதோ
'வா'வென் றழைக்க மாமழை யிங்கு
வந்து பொழியாதோ

''கததக்க கததக்க'' தவளைகள் சொல்லும்
கதைகளைக் கேட்கேனோ
மதம தப்பொடு அன்னை மடிக்குள்நான்
மண்டிக் கிடக்கேனோ

# நர்த்தனம்

குளிர்ந்த காற்று முட்டி மோதிச்
சுழன்ற டிக்குது - கோடைக்
கொடுமை நீக்கி உலகம் முற்றும்
குதூக லிக்குது – காட்டில்
இருந்து மந்தைக் கூட்ட மோடி
இல்லஞ் சேருது – வானம்
எங்கும் வெள்ளிக் கீற்றில் சென்று
மின்னல் பாயுது.

கறுத்த மேகம் வானம் முற்றும்
மறைத்து மூடுது – கதிர்
கான்ற ஒளியி னிழைக ளெங்கும்
இங்குந் தேயுது – நன்கு
பருத்த மரத்தின் கிளைகள் தம்மைப்
பட்சி சேருது – மலர்
பரவிச் சோலை மழையை ஒல்லை
வரவ ழைக்குது.



வயிர வாள்சு ழற்றி வான
வீதி வந்தனள் – அருள்
வாணி யிடிமு ழக்கி வெற்றி
வாகை சூட்டினள் – புவிக்கு
உயிர ளித்துச் 'சளச ளென்ன'
உதிர்ந்த நித்திலம் – இந்த
உலகம் வாழ இயற்கைத் தேவி
புரிந்த நர்த்தனம்.



## மகாவலி

பாத பங்க யத்தி லூறிப் பாயுந் தேன ருவிக
வேத மந்ரம் பாடி விளை யாடும் விந்தை காண்மினே

மலைவ ளர்ந்த வேயின் முத்தும் மணியுங் கொண்டெ றிந்துமே
கலைகள் தேரும் புலவன் நெஞ்சில் கவிதை வீற ஓடுதே

திமு திமென்று அலையெ றிந்து திசைகள் தோறும் ஓடுது
குமுத முறுந் தேறல் அள்ளிக் குடித்துத் தேரை பாடுது

காவு ளோடிக் கழனி யாடிக் கடுகதிவெண் புரவி போல்
வாவ லைகள் வீங்கிப் பாயும் வளமை வந்து காண்மினே

பொன்வி ரித்த அலைக்க ரத்தில் பூக்கள் கொண்டு நல்லெழில்
பெண்கள் சூட வைத்த கங்கை பெருமை பாடி யாடுவோம்

பூந்துகி லுடுத்த கங்கை பொன்னி லங்கை யெங்கணும்
பாய்ந்து நல்ல வளமை ஆற்றும் பான்மை காண எழுமினே

காடும் மேடும் மகாவலி கங்கை மேவி ஓடவே
வாடல் இன்றி ஈழம் எங்கும் வாழ்த்துப் பாடி ஆடுமே

பொங்க ரின்நு ழைந்து வாவி புகுந்த ழைத்து ஈழநல்
மங்கை யுள்ளம் பொங்க ஓடும் மகாவ லியும் வாழ்கவே.



## தை தோன்றுது

பொங்கும் இருட்திரை நீக்கியே – அருட்
புத்தொளி எங்கும் தேக்கியே
செங்கதிர் வானினைச் சேர்ந்தனன் – கவி
செய்து பலரதைப் பாடினர்.

பொன்னின் ஒளிக்கீற்றுப் பொலிந்தது – கடல்
பொங்கி ஒலித்தலை எறிந்தது
“தண்”ணெனத் தென்றல் தவழ்ந்தது–பொய்கைத்
தடங்களிற் றாமரை மலர்ந்தது.

வண்டுகள் கின்னர வாழ்த்தொடு – புது
மலர்களில் மதுவினைச் சேர்த்தன
எண்ணிற் பலப்பல எழிற்சுவை – வானில்
ஏற்றி இரவி எழுந்தனன்.

செந்நெற் கதிர்க்குலை சிரித்திட — அதைச்
சென்று சிலபட்சி கொறித்தன
மண்ணின் பணமுணர் மறவர்தோள் — மகிழ்
மண்டிப் புடைத்து மலைத்தன.

கன்னியர் கைவளை கலங்கிட — செய்ய
காலினிற் கிண்கிணி அலம்பிட
பண்ணிய கூத்தினைப் பார்த்துமே — விண்ணிற்
பருதி எழுந்துலா வந்தனன்.

மாயம் புரிந்தது வானகம் — அன்பின்
மர்மம் புரிந்தது மண்ணகம்
தோயும் ஒளிவெள்ளம் உலகெலாம் — தமிழ்த்
தொன்மை விளக்கித்தை வந்தது.



# செங்கதிர்

புத்தம் புதுமலர் புன்னகை தெய்திடப்
பொங்கும் கடல்அலை சங்கம் முழங்கிடச்
சித்தம் மகிழ்ந்த உழவர்கள் நாவெலாம்
செங்கதி ரோன்வாழ்க வாழ்கென்று வாழ்த்திட.


தென்றல் பனித்துளி சிந்தி நடந்திட
செந்தமிழ்ப் பாட்டுடன் மங்கையர் ஆடிடக்
குன்றிற் குதித்த நதியோடி ஓடையில்
குமிழிட்டுச் சுழிபட்டுக் குலாவிக் கழித்திட.

உந்தி யெழுந்துவான் ஒளிக்குளத் தாடியிவ்
உலகினைத் தங்க முலாமிட்டுக் கூடியெம்
செங்கதிர் வானத்தில் ஏறினன் தைவரச்
சிலிர்த்தது நெற்கதிர் விழித்த துலகெலாம்.

வானம் பொழிந்தது பூமி விளைந்தது
மக்கள் உழைப்பு மகிழப் பொலிந்தது
தானம் சிறந்தது வெய்யோன் வடதிசை
தாவி நடந்தது தையும் பிறந்தது.

பட்டுப் புனைந்தவர் தம்மொடு ஆயிரம்
பொட்டல்க ளோடாடை பூண்டவர் தாமுமாய்
ஒட்டியுறவாடிப் பொங்கலிட் டேநறும்
மட்டவிழ் புதுமலர் தூவி வணங்கினர்.

செங்கதிர் தந்தநல் நெல்லெடுத் துச்சுவைத்
தேன்பழம் பால்கொண்டு படைய விட்டு
மங்கையர் சூழ்தரப் பொங்க லிட்டே தமிழ்ச்
சிங்கங்கள் வாழ்த்தினர் வாழ்க பொங்கல்!





# வசந்த விழா

கரும்பனைக் காலின்மேல் மேகத்திரை போர்த்த
கந்தர்வப் பந்தலிலே – எம்
மருங்கும் கமுகும் கதலிகளும் நட்டு
மாண்பொழில் செய்தாச்சு.

மின்னற் சரட்டினைப் பின்னியே தோரணம்
மேலே அமைந் தாச்சு – எழில்
துன்னிடுந் தூவியும் தோகையுமே கொண்டு
சோடனை செய்தாச்சு.

புத்தம் புதுமணல் பரப்பி வசந்தனைப்
போற்றி அழைத்தாச்சு – வானில்
எத்திசை யும்ஒளி ஏற்றிடக் கோடி
எழில்மீன் விளக்காச்சு.

மங்கலப் பொற்கும்பம் வானில் அமைத்திட
மதியை அழைத்தாச்சு – செய்தி
எங்கும் அறைந்திடப் பூங்குயிற் றூதினை
ஏவி விடலாச்சு.

வெண்மலர்க் கிண்ணியில் மதுரசம் வார்த்து
விருந்து மகிழ்ந்திடவே – வண்டுக்
கன்னியர் சேர்ந்திசை பாடினர் ஆடினர்
களிப்பில் அயர்ந்திடவே.

மாம்பழம் கொத்தி மகிழ்ந்திடும் கிள்ளையில்
மாரன் இவர்ந்துவந்தான் – நல்ல
வேம்பின் மலர்மண மாலை அணிந்திவன்!
வேனிலோன் வந்துவிட்டான்.

வள்ளைக் கொடியென மெல்ல அசைந்தன்ன
வசந்தி மலர்ச்சிரிப்பால் – அவன்
உள்ளம் பறித்தந்தக் கொள்ளையி லேயின்பம்
அள்ளி நடந்துவந்தாள்.

வசந்த சேனையை வேனிலோன் கூடி
வந்தபூம் பந்தலிலே – நின்று
அசந்த துலகெலாம் இன்பக் களிப்பினில்
ஆனந்த மாடியவே.



# கவிதைத் தெய்வம

பூவில் காவில் தேனில் – தீப்
பொறியில் பொய்யில் புலவன்
நாவில் கவிதைத் தேவி – நின்று
நடன மாடி மகிழ்வாள்.

அன்பு கொண்ட நல்லோர் – நெஞ்சை
அணைத்துக் காதல் புரிவாள்
வன்பு கண்ட போது – ஊழி
வாரி போல எழுவாள்.

தெளளத் தெளிந்த ஆற்றில் – ஒளி
திரண்ட முத்து மணிகள்
அள்ளிக் கொண்டு வருவாள் – வந்து
அன்ப ருக்கு அருள்வாள்.

தீயில் தோய்த்த போதும் – கொடிய
திருடர் கொண்ட போதும்
பாயும் வெள்ளத் தோடு – ஏட்டைப்
படர விட்ட போதும்.

தோயும் உள்ளம் எல்லாம் – கவிதை
துளித்தெ ழுந்து விண்டு
பாயும் புதுமை இளமை – மிக்க
பண்பு எல்லாங் கொண்டே..

வாழி கவிதைத் தேவி – இந்த
வைய மூள்ள மட்டும்
ஊழி ஊழி எல்லாம் – நல்லோர்
உள்ளம் நின்று லாவி.

நாத வின்ப மாவாள் – காற்றில்
நடந்து விண்ணைச் சாடி
மோதி மின்னற் கீற்றில் – சென்று
முழங்கி இன்பஞ் செய்வாள்

பண்ணில் யாழின் ஒலியும் – தூய்ய
படிக மன்ன உருவும்
கண்ணில் இன்பச் சுடரும் – ஏந்திக்
கவிதைத் தேவி வருவாள்.

கவிதை எங்கள் தெய்வம் – அவள்
கருணை பெற்ற மனிதர்
புவியில் என்றும் பொன்றாப் – பெரும்
புகழி னோடு வாழ்வாள்.




# பாரதி நினைவு

தீயினை வான வெளியினை அமுதைத்
தேனினிற் குழைத்தெடுத் தலகத்
தாளினில் நிலவின் கதிரினைக் கொண்டு
தண்டமிழ்க் கவிதைகள் எழுதி
தாழ்வினை நீக்கி இறப்பினை வென்று
தமிழ்உள அளவுமிப் பூவில்
வாழ்வினைக் கொண்ட பாரதி திருப்பேர்
வாழ்த்துதும் வாழ்வுநாம் உறவே.

சுவைபுதி தாளுஞ் சொல்நனி புதிதாய்
சோர்விலாக் கவித்தொழில் மேவி
நவபொருள் கண்டு நாட்டினுக் குழைத்து
நயமுறு தமிழினுக் குற்ற
வசையற வற்று வளம்புதி தான
வான்கவி தந்தபா ரதிதன்
இசைதனைப் போற்றி ஏத்துவம் நாமிங்(கு)
ஏற்றமுற் றிருந்திடு தற்கே.

சுதந்திரம் அடிமைத் தொண்டிலா உலகம்
சோற்றினை யாவரும் பெறவும்
விதந்திடு கல்வி கேள்விவித் தைகளால்
விஞ்சையர் ஆகவுஞ் சாந்தப்
பதந்தரு நெறியில் உலகினுக் கெல்லாம்
பாரதம் வாழ்வினை அளித்துச்
சுகந்தர உழைத்த பாரதி நினைவாய்
சுதந்திர பாரதம் எழுக.





# நாட்டுக்கொரு நாவலர்

நாவலர் இன்தமிழ் நலனுகர் தென்றல்
காவலர் சிவநெறிக் கருணையின் கொண்டல் – அவர்
வாதினில் எதிலர் கோளரி வஞ்சச்
சூதினர் முன்னர் சுடர்ப்பெருஞ் செந்தீ.

காதலி தமிழுடன் மோகம் விளைத்தார்
கோதையட் பூவசன நடையை அளித்தார் - சைவம்
பேசிட வோர்பல மேடை யமைத்தார்
ஆசிடும் அஞ்ஞான மாயை யழித்தார்.

இன்பத் தமிழ்ஏடு தேடி எடுத்துயிர்(ப்)
பஞ்சால் துடைத்துப் படித்துக் களித்துப்பின் - அவை
எங்கும் உலாவர எந்திரம் சேர்த்திசை
விஞ்சை தழுவிட விளங்கினன் நாவலன்.

நாட்டுக் கொருநல்லை நாவலன் இல்லையேல்
பாட்டுக்கும் சிவநெறிப் பண்பிற்கும் பிறப்பிலா- இன்ப
வீட்டுக்கும் ஒளிக்கல்வி விளக்கிற்கும் தமிழ்க்கலைக்
காட்டுக்கும் ஏங்கிக் கலங்குமிவ் வுலகமே

# வன்னியசிங்கம்

நடையினில் மான உடையினில் பேச்சில்
நாயினுங் கடையராய் மெலிந்து
மிடையராய் அயலார் பழித்திட மானம்
இற்றுடல் வளர்த்துலட் சியமாய்
படையெனில் ஒடுங்கிப் பசாசெனப் பயந்து
பசப்பலை வழித்துணை யாக
மடையராய் இழிந்த தமிழர்தம் உணர்ச்சி
மந்திரம் வன்னிய சிங்கம்.

வஞ்சகம் புரிந்து தமிழரை மடக்கு
வாழ்வினில் தாய்வளங் காண
நெஞ்சிடங் கொண்ட கயவரை ஒதுக்கி
நீதியை முன்னிலை நிறுத்தி
அஞ்சுதல் ஒழிமின் தோழரே இனிநாம்
ஆளுவோம் எம்திரு நாட்டைத்
துஞ்சினும் பெறுவோம் சுதந்திரம் என்றே
சொன்னவன் வன்னியசிங்கம்.



றோட்டினைச் செல்லும் றோட்டினை மக்கள்
கூடிடும் இடங்களை மற்றும்
வீட்டினை எல்லாம் தமிழர்தம் வாழ்வு
விளக்கிடும் மேடைக ளாக்கிப்
பாட்டிலும் காசியப் பேச்சிலும் வீரப்
பண்ணிலும் சொல்லிலும் விளக்கி
ஆட்சிபெற றுய்யப் பாசறை அமைத்த
அமரன்எம் வன்னிய சிங்கம்.

அச்சமிங் கொழித்து ஆண்மையை வளர்க்கும்
ஆற்றலிற் சிறந்தது - அவர்சொல்
இச்சகம் முழுதும் தமிழர்வெம் குறைகள்
எடுத்துரை மொழிந்தது - அவர்வாய்
கொச்சைகள் பேசி 'இங்கெமக் கின்னும்
கொஞ்சமுந் தமிழ்வரா' தென்னும்
பச்சைநற் றமிழர் வாயெலாம் தமிழைப்
பாலென வார்த்தது - அவர்கை.

வடக்கென ஈழக் கிழக்கென வேறு
வன்னியென் றின்னவேற் றுமைகள்
தமக்கித மாக ஆக்கியோர் செயலைத்
தாக்கிஅந் நோக்கினை நீற்றி
இடக்கெனக் கிடந்த சாதிவேற் றுமைகள்
யாவுமிங் கிற்றொழிந் தழியத்
தொடக்கிய முதல்வன் வன்னிய சிங்கம்
தூயவன் நாமமே வாழ்க!

## காலா! உனக்கு ஐயோ!

அண்ணு அறிவின் வைப்பே! தேஞர்
அமுதச் சொல்லின் ஊற்றே!
இம்மா நிலத்தில் தமிழின் வாழ்வே
இதயங் கொண்ட முகிலே!
உன்ஞெ லன்றே நாமுந் தமிழும்
உயர்வோம் என்று இருந்தோம்
என்னே கொடுமை! என்னே கொடுமை!
எம்மை விட்டே சென்ருய்.

சென்ருய் அண்ணு! செயலொன் றின்றித்
திகைக்கும் எமக்கென் சொன்ஞய்!
குன்றே அனைய கொள்கை வைத்துக்
குலையா உறுதி யோடு
''ஒன்றே குலமும் தெய்வமும்'' என்ருய்
ஒல்காப் புகழால் வையம்
கண்டே ஏத்த நின்ருய் ஐயோ!
கௌவிச் சென்ருன் காலன்.



காலா! உனக்கு ஐயோ! தமிழின்
கனித்தே னுயிரேன் கொண்டாய்?
நாலா திசையும் நல்லோர் உயிரில்
நாட்டம் உனக்கு இப்போ
ஏலா தின்யுன் கொடுமை தாங்க
எங்கோன் இளம்பிறை யாளன்
காலால் மீண்டோ குதைபட நேரும்
கருதிலை யோஅட கெடுவாய்?



# ஈழம் எமது நாடு

வாழ வகைசெய்ய வேண்டும் – இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
ஆளும் உரிமையும் வேண்டும் – தமிழும்
ஆட்சி மொழியாக வேண்டும்.


ஈழம் எமதுயர் நாடு – எந்தை
இருந்து மகிழ்ந்து மடிந்தமண் மேடு
சூழுந் துயர்முடித் திங்கே – சுத்த
சுதந்திர ராக மகிழ்ந்திடு வோமே.

பிறந்தபொன் நாடிது கண்டீர் – காதல்
பேசி மகிழ்ந்து அணைந்ததிந் நாடே
இறந்தெம் உடலெரு வாக்கி – இந்த
ஏர்பெற்ற நாட்டிற்கெம் ரத்தநீர் வார்த்தோம்.



அந்நியர் என்றிட லாமோ – எமக்கு
ஆளும் உரிமை மறுத்திடற் போமோ
பண்ணிய சூழ்ச்சிகள் எல்லாம் – தூள்
பண்ணிடக் கூடுமோர் நாள்வரு மன்றோ.

ஓலமிட் டாவதொன் றில்லை – நித்தம்
உதைபட்டு வாழ்வதுந் தொல்லை
காலம் வருமந்த வேளை – எதிர்
காத்திருந் தேயெடு வாளை.




## புகழ் பாடல் எந்நாள்

பாலாறு பாய்கின்ற நாடு – வீரர்
பலர்கல்லில் நிலைபெற்ற தேசம்
நூலோடு பயில்கின்ற மாதர் – நுண்
இடையோடு எழில்பெற்று லாவ
மேல்நாடு முழுதுமென் நாட்டின்–உயர்
விஞ்ஞானமே கண்டு வியக்க
சேலோடு பூவாடு பொய்கை – மிக்கு
செழிப்போடு வளர்கின்ற தென்றும்,

''இல்லாமை என்பது மின்றி - உண்டு
எல்லாமென் றிருமாப்பு மின்றி
எல்லாரு மெல்லாமும் பெற்று மிக்க
ஏற்றம் அடைந்தார்கள்'' என்றும்
''நல்லா றுரைதிருக் குறளும் – மிக்க
நவீனவிஞ் ஞானத்தின் முடிபும்
வல்லார் பயில்கல்விச் சாலை – நனி
வளர்கின்ற திங்''கென்று கேட்டும்



பலர்கூடி வருகின்றார் கல்வி – இங்கு
பயில்தற்கு முறவாடு தற்கும்
நிலவூடு மிதக்கின்ற நாடும் – எம்
நிலைகாணத் தூதொன்ற னுப்பி
கலைஞானப் பரிவர்த்த னைக்கு – எம்மைக்
கைகூப்பிக் கேட்டதென் றோர்சொல்
செவிகேட்க உளம்பூத்து விம்மி – மிக்க
திறலோடெம் புகழ்பாட லெந்நாள்?



# ஆரியம்

கல்லெடுத்துக் கோயில்கட்டிக் காலமெல்லாங் கடவுள்புகழ்
சொல்லவைத்து வையமெலாம் சோறளித்த செந்தமிழர்
இல்லையென்று வந்தோர்க்கு இல்லையென் னாதுவக்கும்
வள்ளல்களை யீன்று வளங்கொண்ட தமிழ்நாடு.

மார்புக் கவசமொடு பணிநெடுங்கை வேலேந்தி
போர்செய் விறல்மறவர் பொலிந்துயர்ந்த திருநாடு
ஆர்வலர்தம் மிடிதீர்க்கும் அருளாளர் தம்முயர்ந்த
சீர்பெருக வையமெலாஞ் சிறந்துயர்ந்த நாம்தமிழர்.

அல்லல் அடைந்தோம் அரசுரிமை தாம்இழந்தோம்
பன்னூறு ஆண்டு பாழடைந்து சீரழிந்தோம்
வெல்லமென நாங்கள் விரும்பிய கொள்கைசில
கொல்லவரும் நாகமெனக் குறிபார்த் தெழுந்ததினால்.

சாதிமத பேதச் சண்டைகளும் சஞ்சலமும்
வேதியன் என்றோர்வஞ்சன் விதைத்தான்எம் மத்தியிலே
வில்லெடுத்துக் காணாத வெற்றியையவ் வேதியனோர்
புல்லெடுத்து எம்மினத்தைப் பூழ்திப் படுத்திவிட்டான்.



அண்ணனுக்கும் தம்பிக்கும் அடிதடியை மூட்டிவிட்டான்
மண்ணாளும் வேந்தனையும் மக்களையும் பிரித்துவைத்
இந்நாள் வரையுமந்த இரக்கமற்ற வேதியனால் [தான்
எம்நாடும் நாமும் இயல்பழிந்து வாடுகின்றோம்.

இரும்பெடுத்த வேள்மறவர் என்னே புதுமையீது
துரும்பெடுத்த ஆரியர்க்குத் தொண்டடிமை யானார்கள்
கருங்கல்லிற் சிலைவடித்த கன்னித் தமிழ்ச்சிற்பி
சுருங்குழகக் கண்களில்நீர் சுரக்க இரந்துநின்றான்.

காடழித்து நாடாக்கிக் கழனிகண்டு கவின்விளைத்து
மாடுபெற்ற வேள்மக்கள் மறையவனுக் கெளியவனாய்
மாடுபட்டும் பயனறியாப் பரதேசி யாயிழிந்து
ஓடுகொண்டு பிச்சையென ஊர்சுற்றி உலையவைத்தான்.

எங்கள் தமிழும் இனியகவின் கலையும்
மங்கிடவே பார்ப்பானோர் மாயவலை விரித்தான்
திங்கள் முடியழகர் சிவனாரின் பெயர்சொல்லிப்
பங்கம் புரிந்தெம்மைப் பலிகொண்டான் படுபாவி

'கூத்தாடி' என்றிழிவாய்க் கூறினான் நடிப்பவனை
''ஏத்தாதே இசையிலின்பம் ஏத்தினால் நரகடைவாய்''
வேத்தார்கள் வேதியனின் வேண்டாத உரைகேட்டுத்
தூர்த்தார்கள் கலையார்வம் தொடர்ந்தார்கள் ஆரியன்பின்

உக்கிமடிந் தோம்நாம் உடல்வளர்த்த பார்ப்பானின்
துப்பற் பணிக்கத்தைத் தூக்கிச் சுமந்துநின்றோம்
ஐந்தெழுத்தா லோர்பாடை ஆமோவென் றெந்தமிழை
நிந்தித்தான் வடமொழிக்கு நிகர்வேறு இல்லையென்றான்

"தீட்டுமொழி தமிழ்" என்றான் தீண்டுதற்கு யாம்மறுத்து
வீட்டுப்படி வரைக்கும் வேண்டினோம் வடமொழியை
பாட்டினிலும் ஏட்டினிலும் பரவினோம் அதன்புகழை
நாட்டினோம் 'தேவ நாகரிக பாடை'யென,

சொந்தக் கலையிழந்து சுகந்தருசெந் தமிழ்மறந்து
பந்த மறுத்துப் பரமபதம் அடைவதொன்றே
சிந்தையினிற் கொண்டு சிவனாரின் கோயில்புக
வந்தானை யங்கும் வாயிலுக்கப் பாலென்றான்.

வேதத்தில் ஏதோ விளக்கங்கள் சொல்லியெமைப்
பேதித் திடஇன்னும் பேயாய் உழைக்கின்றான்
மோதி மிதித்தவனின் முகத்தில் உமிழ்ந்துதமிழ்ச்
சாதிக்குள் ளேபிறிதோர் சாதியில்லை என்றுசெய்வோம்.

'தீண்டாதார்' என்றின்பத் திராவிடரை யேயந்த
வேண்டாதான் சொல்ல விட்டுவைத்துக் கேட்பதுவோ
ஆண்டாண்டு தோறுமிவ் வாச்சகனால் பட்டதுயர்
மீண்டொருகால் வாராமல் கோவிலெலாம் நாம்திறப்போம்.



# ஐயோ தமிழ்ச் சாதியே:

ஐயோ தமிழ்ச் சாதியே!
உனக்கே னிந்த அவலம்?
உய்வே இல்லையோ இந்த
உலகினில் உனக்கிடம் உண்டோ?

நண்பனை அறிந்திட அறியாய் – உன்னை
நம்பின பேர்களுக் கின்னல்செய் திடுவாய்
பண்பினைத் துறந்தனை மாற்றார்
பாதங்கள் தாங்கியுன் உயிர்தனைக் காத்தாய்

சாதியில் நீஇழிந் தோனாய் – ஆளுஞ்
சதுரர்க ளடிதொழு தேதினம் வாழ்வாய்
நீதிலா உன்னயல் வீட்டான – தொட்டால்
தீட்டென்று வாதுகள் புரிவாய்.

கோயிலைப் பூட்டிவைக் கின்றாய் – உன்
கூடப் பிறந்தோரை யேயடிக் கின்றாய்
நாயினைப் போலுனை எண்ணி – மாற்றார்
நகைப்பதை அறிதியோ நானெதைச் சொல்வேன்!

வீட்டுக்குள் பேசுவை வீரம் – அண்டை
வீட்டார்க்குள் நீபெருஞ் சாதி
வாட்டிடும் அந்நியர் தமையே – தினம்
வழுத்திநீ வணங்குதல் வழக்கம்.

ஆங்கிலன் ஒருவன்வந் துற்றால் – உன்றன்
ஆலயந் திறந்துள் அழைப்பாய்
ஓங்குபேர் அரசின் அமைச்சன் – எவன்
ஒருவனோ அவனுக்குன் கோவில் திறப்பாய்.

தீங்கறி யாதநம் தோழர் – நெஞ்சத்
திடங்கொண்ட மறவர் பறையர்
ஈங்கிவர் கோவிலுள் வந்தால் – எமக்கு
ஈனமென் றேபெருங் கதவடைக் கின்றாய்.

கோவில்கள் உன்னது சொத்தோ? – இந்தக்
கோபுரம் எழுப்பிட யார்உழைத் தார்கள்
பாவிகள் உங்கட்கு இங்கு – என்ன
பவிசுண்டு திறப்பினை எடடா!

ஆண்டவன் யாவர்க்கும் பொதுமை – நீ
அடைத்திடத் தானுண்டோ திறமை?
வேண்டுத லினுஞ்சில முறையே – இனி
விழைத்திடும் உன்னுடன் மறப்போர்.



# இளைஞர் பாட்டு

காற்றிற் கடிய மனம்படைத்தோம் – பொய்மை
கண்டு கொதிக்கும் உளம்படைத்தோம்
கூற்றை எதிர்த்தறை கூவிடுவோம் – கொண்ட
கொள்கை வளர்த்திடப் போரிடுவோம்.

வாழ்வதற் கென்றிங்கே நாம்பிறந்தோம் – மாய
வாழ்க்கை யிதென்று வருந்திநில்லோம்
சூழ்துயர் ஒன்றினை நாமறியோம் – பிறர்
சொல்லுந் துயர்களை எள்ளிடுவோம்.

கற்பனைத் தேரினி லுலாவருவோம் – எதிர்
காலக் கனவுகள் கண்டிடுவோம்
அற்புதப் பண்ணிசை பாடிடுவோம் – கூடி
ஆடித் திரிந்து அகம்மகிழ்வோம்.

காலம்எல் லாம்காதல் பேசிடுவோம் – காதற்
கன்னிமேற் கண்ணின் கணைவிடுவோம்
கோலம் நவநவ மாய்வருவோம் – எங்கள்
கூட்டங் களிற்கொள்கை வாதிடுவோம்.

உலகம் எமக்கொரு நந்தவனம் – கைகள்
உண்டே ரண்டுஎங்கள் மூலதனம்
பழகும் உயிரெல்லாம் அன்புமயம் – காதற்
பாவையிட மன்றோ எம்மிதயம்.

# அந்தநாள்

தென்னங் குரும்பைத் தேர்கட்டிச் சாமிக்குப்
புன்னம் பூச்சூடி பொற்சரிகைக் கோலமிட்டு
அண்ணன் குழலூத அக்காள் தவிலடிக்க
சந்நத்த மாடிச் சதிர்செய்நாள் பாடேனோ?

முற்றத்து முல்லை முகையொலித்து மாலைகட்டிப்
பக்கத்து வீட்டுப் பரிமளத்தின் தோள்சேர்த்துக்
கொக்கட்டிச் சோலை கோயில்பனங் காடுனனத்
திக்கெட்டு முலாவருநாள் திரும்பிவரப் பாடேனோ?

வேப்ப மரத்தடியில் வீடுகட்டி என்மனையாள்
ஆப்பந் தருவாளென் றங்கிருக்க என்னையவள்
மாப்பொன்னூற் றுலிகட்ட மாட்டாதா னென்றேசி
ஆப்பையடி பட்டநாள் அதனைவரப் பாடேனோ?



அள்ளிக் கொளுத்தி அடங்காத வெய்யிலிலே
துள்ளிக் குதித்தென் தோழருடன் பள்ளிக்குச்
செல்ல வழியனுப்பித் திரும்பிவர அணைத்தமுது
அள்ளித் தருமன்னை அன்புவரப் பாடேனோ?

கத்தும் தவளைகளைக் கையேந்தி நீர்நிலையில்
மெத்தச் சிறியாமை மீன்இவற்றின் வேட்டையிலே
சுற்றித் திரிந்து சுளியோடி நீச்சலிட்டுச்
சித்தம் மகிழ்அந்நாள் திரும்பிவரப் பாடேனோ

செம்மணற்றிக் காட்டில் செவ்விளநீர் பறித்தருந்திப்
பொம்மன் கிணற்றிலதைப் போட்டுவிட்டு அவன்வளவில்
வெள்ளரியின் பிஞ்சையெலாம் வேண்டுமட்டும் காம்பிடுங்கிப்
பள்ளிவரப் பட்டஅடி பாடின்அந்நாள் மீளாதோ?

புற்றுவெட்டி எலிபிடிக்கப் போனதுவும் நாதாளிப்
பற்றைக்குள் ளேயிருந்து பாம்பொன்று சீறிஎழும்
சத்தத்தைக் கேட்டயலில் தடுக்கிவிழுந் தெழுந்தோடி
மெத்தக் களைத்தஅந்நாள் மீண்டுவரப் பாடேனோ?

பள்ளியிற் சோதனையில் 'பாஸ்'செய்தே னென்றுசான்
சொல்லியது மென்னைவந்து தோழரெல்லாம் சூழவங்
கள்ளிவிழி யெறிந்து கருணைதவழ் ஒளிமுகத்தில் [கோர்
மின்னலிட நின்றதனை மீண்டுவரப் பாடேனோ?

# சதிர்

குயிலைப் போலக் குரல்ப டைத்த
    கோம ளாங்கி யாமவள்
மயிலைப் போல வந்து கோயில்
    மண்ட பத்தில் ஆடினாள்.

நெட்டைக் கழுத்தை முன்னும் பின்னும்
    நீட்டி நீட்டிக் கண்களை
வெட்டி வெட்டிக் கைக ளைமேல்
    வீசி வீசி யாடினாள்.

குந்தி யெழுந்து குதித்து மிதித்துக்
    குலுக்கி நடனம் ஆடினாள்
முந்தி நின்ற மனிதர் கண்ணில்
    மண்ணைக் காலாற் றூவினாள்.

குறத்தி வேடம் போட்டு வந்து
    குறிகள் சொல்லத் தேடினாள்
முறத்தி னாலே புலிய டித்தேன்
    முன்னர் என்று பாடினாள்.



வண்ண வண்ணச் சேலை கட்டி
    வந்து நடன மாடினாள்
பண்ணிற் சில பாட்டுக் கேற்ற
    பதம்பி டித்து ஆடினாள்.

பம்ப ரம்போற் சுற்று வாள்தன்
    பளப ளக்கும் ஆடையில்
ஒன்றி ரண்டைச் சுண்டு நேரத்
    துரிந்து ரிந்து வீசுவாள்.

'மாலை சூட வந்தேன் இந்த
    மாத விப்பெண் என்றனள்
பாலை சிந்தும் முறுவல் காட்டிப்
    பரவ சத்துள் ஆழ்த்தினாள்

பக்கப் பாட்டு வேணு கோபால்
    பாட்டுப் பாட மத்தளம்
கொட்டும் வேகத் தோடு அவளும்
    குதித்துக் குதித்து ஆடினாள்.

காலிற் கெச்சை கலக லென்னக்
    கையிற் றாளம் போட்டவள்
வேலன் கோயில் வீதி முற்றும்
    விடிய விடிய ஆடினாள்.

காத்தி ருந்து களைத்துப் போன
    கந்தன் கோவில் மூப்பனார்
பார்த்து அசையா மணிய டிக்கப்
    பாவை யோடிப் போயினாள்.

# என் ஊர்

காரம் மணம்குணத்தால் கண்டோர்கள் கல்மனைதைச்
சோரங்கொண் டன்னார் சொன்னவிலை கொண்டுமகிழ்
சாரம் மிகுத்தகரச் சரவணைப் புகையிலையென்(று)
ஈழம் முழுதும்பேர் இலங்குகின்ற என்னூரே !

ஏர்பெற்ற செல்வர் எழில்பெற்ற கம்மாளர்
சீர்பெற்ற கைவினைஞர் சீலநெச வாளரெனப்
பேர்பெற்ற தொழில்களெலாம் பேணிவளர் சரவணை
பார்உற்ற அன்றே பண்புற்ற பழம்ஊரே ! [யூர்

காகம் கரைந்தெழுப்பக் கண்விழித்துக் காய்பியின்மேல்
மோகம் இறுக்கஅவள் முன்னோடிக் குவளைதனை
வேகத் தொடுவிழுங்கி விட்டுத்தம் தொழில்மேவிப்
போகத் துடிப்போர்வாழ் பொற்பதியென் சரவணையே!



கார்கண்டு விண்டுமனக் களிப்போடு வயல்களுக்கு
ஏர்கொண்டு செல்இளைஞர் இட்ட அடி பின்தொடர்ந்து
வார்கொண்டு விம்முமுலை வண்ண இடை பெண்மயிலார்
மோர்கொண்டு செல்காட்சி முந்துமெங்கள் சரவணையூர்

ஊரெல்லாங் கூவம் ஒன்றிரண் டேநன்னீரவ்
நீரள்ளுங் குடங்க ளிடை நீந்தஅசைந் தொசியக்
காரன்ன கூந்தல் தனைக் கைப்பிறையால் கோதிமயல்
ஓரக் கடைவிழியால் உலகளப்பார் வாழ் ஊரே.

ஆடுதுலா மரம்மீது ஆணழகன் ஏறிநின்று
ஓடிமிதித் துவைத்த உடல்வாதை தான்மறக்கப்
பாடிக் களித்துவிசில் பண்ணிக்கும் மாளமிட்டும்
வேடிக்கை யோடுபயன் விளைக்குமெங்கள் சரவணையூர்

கல்விபயில் சாலைசில கடவுள்களின் கோயில்சில
எல்லைவரு நல்லூர்கள் இயன்றபெரு வெளிவடக்கில்
நல்லவிளை யுள்உடனே நண்ணினர்க்கு வாழ்வளித்து
எல்லையிலாப் பெரும்புகழோ டிருப்பதுவும் எம்மூரே

தாழை மணம்பரப்பத் தண்கடற்புள் தாலாட்ட
பாளை சிதறிப் பதனீர் குளிப்பாட்ட
ஆளை யடிமைகொளும் அரசபணி வெறுத்தொதுக்கும்
சீலத் திறல்மிகுந்த செந்தமிழர் வாழ்ஊரே !

# அத்தை

தோரணப் பூப்பந்தர் வாயிலிலே – நான்
தோழ னுடன்உள் நுழைகையிலே – அங்கு
ஆரணம் பாடுவோர் முன்னேவந்து – என்னை
ஆவலுடன் அத்தை பாத்துநின்றுள்.

மஞ்சம் மீதிருந்தென் மனைவியுடன் – சில
மனம்விட்டுப் பேசி மகிழ்கையிலே – வந்த
பிஞ்சுக் குழந்தையைப் பிடித்திழுத் தேயவள்
பின்னுலெங் கோடி ஒழித்துவிட்டாள்?

'தித்திப்பு'ப் பண்டங்கள் செய்துவைத்தே – நான்
தின்னு மட்டும்மறை வாகநின்று – நெஞ்சில்
மெத்த மகிழுமென் அத்தைமுகத்தினில் – நின்று
மின்னிடும் புன்னகை சொல்வதென்ன?

மங்கை கரத்தினைப் பற்றிக்கொண்டு – இந்த
மணவாளன் வீதியிற் போகையிலே – இன்பம்
பொங்கும் விழிகளில் புத்தொளிக் கதிரெழ – மிக
பூரிக்கும் உள்ளம் புகல்வதென்னே?



# கதை சொன்ன கவிதை

கன்னற் கவிதைக் கருவினைக்
காணக் கடலின் கரையொரு
புன்னை மரத்து நிழலிலே
பொழுது முற்றும் வாடினேன்.

வங்கம் நூறு வந்தது
வானும் மூடம் போட்டது
கங்குல் வந்த போதிலும்
கவிதை காணவில்லையே.

அந்தி மாலைச் செக்கரில்
அல்லிக் குளம்ஏகினேன்
"செந்தமிழுக் கென்பணி
செய்வ" தென்ற சிந்தையில்.

மந்த மாரு தந்தவழ்ந்து
மலரழைந்து வீசிட
அந்தரத் தேயம்புலி
அசைந்தசைந்து ஓடிட.

கந்தருவ கான மெங்கோ
காற்றில் வந்து மோதிடச்
சுந்தரக் கவிதை சொல்லத்
துடித்தேன் வரவில்லையே!

விண்ணும் மண்ணும் காரிருள்
வீங்கு கின்ற வேளையில்
என்னை நோக்கி நின்றிடும்
இல்லம் நோக்கிச் சென்றநான்.

கன்னற் கவிதை கண்டனே
கையுங் காலுங் கொண்டது
மின்னெற் பூவெனும் முகம்
மிருதுவான பொன்னுடல்.

கையசைத்து என்னுடன்
கதையளந்த கவிதையே!
உய்க நீடு நீள்புவி
உள்ளமட்டும் வாழ்கநீ!



## தாபம்

அழகிற்குத் 'தமிழ்' என்று
பெயர் வந்த தா? – இல்லை
அமுதிற்குத் 'தமிழ்' என்று
பெயர் வந்த தா?
இவளுக்குத் தமிழ் என்று
பெயர் சொன்ன தார் – இவள்
இசை விற்கு 'அசை' யென்று
எனைச் செய்த தேன்?

இருளுக்கு 'உற' வென்று
குழல் சொன்ன தேன்? – இவள்
இதழுக்குத் தாமரை
மலர் செய்த தென்?
'பொருதற்கு' என ரண்டு
மலை நின்றதா? – இவள்
புருவத்தில் இணை என்று
சிலை சொன்ன தா?

மருளற்கு என இந்த
விழி நின்ற தா – என்
மனதிற்குள் நோய் தந்து
அகல் கின்ற தேன்?
தெரு வுற்று நடமாடுஞ்
சிலை யுள்ளதா? – அதன்
சிரிப்புக்குள் மருதோன்றி
கமழ் கின்ற தா?

அழகென்ப திவள் தன்னால்
நிறை வுற்ற தா? – இவள்
நிலவென்றால் அழகிங்கு
நிலையுற்ற தேன்?
'மழை'என்றும்இ வளுக்குப்
பெயர் உள்ளதோ ? – இவள்
மருங்குற்றாள் மனதிற்குள்
குளிர் கின்ற தேன்?

பயில் கின்ற கவி இன்பம்
இவள் உண்டதா? – 'தளிர்ப்
பருவத்தின் கருவந்த
திரு' வென்பதா?
அயிலுண்ட. விழி ஒன்றே
எனை வெல்லுமே – இவள்
அடிகொஞ்ச அயல் வந்து
துயர் செய்வதேன்?



நலிவுற்ற தென துள்ளம்
தளிர் கொள்ளுமோ? – இவள்
நகை மின்னும் முகம் என்றன்
அகல் தங்குமோ?
கலை பெற்ற வடி வின்ப
மலை உச்சியில் – உள்ளங்
களி கொண்டு பனிப் போர்க்கு
அறை கூவுமோ ?



# ஏதோ உன் உள்ளம்

தென்றலிலே முல்லைமலர்ச் செழுந்தாது நாறத்
தேன்மொழியுன் மெல்லிதயச் செழுமைமனத தூறும்
குன்றினிலே பிறந்தோடும் குளிர்புனலின் ஓதை
குறும்பொலியாய் என்னிதயத் தின்பவெறி யூட்டும்
மன்றினிடை ஒயிலாக மயிலாடும் போது
மானேநீ என்னோடு உறவாடக் கண்டேன்
மன்றலிலே மாலையிட்டு என்னையுன தாக்க
மாதரசே தாமதமேன் ஏதோ உன்உள்ளம்?

அந்நாளில் எந்நாளும் அருகாக நின்று
'அத்தான்' எனக்கூவி ஆட்டங்கள் காட்டி
பின்னால்நின் றென்கண்கள் பொத்தியென் கன்னம்
பின்னாக முன்வந்தென் நெஞ்சில் புதைப்பாய்
'கல்யாணம்' எமக்கென்று பாட்டி சிரிப்பாள்
கண்ணேயவ் வெண்ணம்என் உள்ளந் தகிக்க
என்னாளும் ஏங்குகிறேன் உன்னை அணைக்க
ஏனோடி தாமதம் ஏதோஉன் உள்ளம்?



படராலம் விழுதனைத் தொடுத்துமே முடித்த
பந்தரில் நீதந்த விளையாட்டுச் சோற்றை
உதவாது என்றுநான் உதைத்தெழ நீயும்
"ஊதாரி" என்றெனை ஏசித் தொலைத்தும்
இதமாக என்னயல் வந்துநின் றிளித்தும்
'இந்தாங்க கோபமா, என்றல்லோ இரந்தாய்
மதமாநான் இன்றுன்னை எண்ணி இளைத்தேன்
மாதரசே தாமதமேன் ஏதோஉன் உள்ளம்

தொட்டில் அசைத்திடத் தூளிகை கேட்டாய்
தோரண மாய்ஆலின் விழுதை அமைத்தேன்
பட்டுத் துணியினால் சுற்றிய கற்சேய்
பள்ளி கொள்ளஎனப் பாட்டு மிசைத்தேன்
வட்டில் எனஆலின் இலையை எடுத்து
வார்த்தபொய்க் கூழினை உண்டு கழித்தேன்
மெட்டி யொலிக்க அணைகுவை யின்றோ
மெல்லெனப் போயின் ஒழிக்குதல் நன்றோ?

# கட்டி யொரு முத்தமளியே!

சித்தி ரத்தில் அற்பு தத்தை
வைத் தமைத்த பொற் சுருவம்
பெற் றெடுத்தாள் அத்தை அவளே – "காமாட்சி"
முத் தெடுக்க நின்ற கடலே.

முல்லை சூடி மெல்ல வரும்
வள்ளை யிடைக் கிள்ளை மொழிக்
கள்ளி யேநீ என் னுளத்தையே – காமாட்சி
கொள்ளை யிலே அள்ளிக் கொண்ட தேன்?

கஞ்ச முகம் பிஞ்சு உளம்,
விஞ்சு முகிற் குஞ்சி எழில்,
பஞ்சின் அடி கெஞ்ச நடந்தாய் – காமாட்சி!
நெஞ்சின் அலை கொஞ்ச வளர்ந்தாய்.



நெட்டைப் பனைக் காடு வேலி
ஒற்றை யடிப் பாதை தோட்டம்
அத்தனை யும் காத்து நின்றேனே – காமாட்சி
சித்தரை யும் கேட்டு வந்தேனே.

"குத்தி நிமிர் கொம் பழுத்தி
முட்ட வரும் காளை தன்னைக்
கட்டு வேன்நான்" என்றுரைத் தனர் – காமாட்சி
கிட்ட அந்த நாளும் என்றனர்.

பொன்னுருக்கிக் கண்ணிய மாய்
மன்ன வையிற் றாலி கட்டய்
புண்ணிய நாள் கேட்டு வந்தேனே – காமாட்சி
என்னை யுனக் காக்கி நின்றேனே.

பட்ட ணத்துக் குட்டி யைப்போல்
பகட்டுக் காட்டிக் குலுக்கி விழி
வெட்டி வரும் கட்ட ழகியே – காமாட்சி
கட்டி யொரு முத்தமளியே.

# முடிபு என்ன?

பள்ளியிலே எதிர்ப்பட்டாய் (கண்கள் நான்கும்
பழகியஅச் சிறுபொழுதில்) முகத்திற் செம்மை
அள்ளியிட நாணுற்றாய் அகத்திற் பொங்கும்
ஆராத காதலினை அன்றே கண்டு
விள்ளிடற்கு இயலாவோர் உணர்வி லுன்றன்
விந்தையெழில் கண்டுவகை கொண்ட நெஞ்சை
கொள்ளையிட்ட வன்செயலை மறக்க வெண்ணி
மறப்பறியாத் தோற்றதனில் துணிவு பெற்றேன்.

நான்நோக்கா முன்என்னை நோக்கி நாணி
நகும்உனது எழில்புகல என்னா லாமோ
வான்நோக்கி மதிகொண்டு வந்து உற்ற
மறுநீக்கி இதுஅதெனில் வாடல் கண்டேன்
கான்நோக்கி மான்கொண்டு வந்து நின்றன்
கண்ணுக்கு உறவென்று சொல்லல் ஈனம்
மான்நோக்கில் மருட்சியுண்டுன் நோக்கி லென்றன்
மயலுக்கு மருந்துண்டு என்று கண்டேன்



எப்போதோ! சென்றாயே! மறப்ப தற்கா?
தாங்கேனித் துயர்இனியும் உடலில் ஆவி
தரியாது உடன்வந்து தாங்க வேண்டும்.

கட்டிலிலே என்அருகில் இருந்தாய் செய்ய
கைசேர்த்து இழுத்தணைக்க எண்ணி னேனா?
தெற்றெனவெங் கேயோநீ சென்றாய் பின்னர்
திரும்பிடவந் 'தொருமுத்தம் தரவா' என்றாய்
வட்டிமிகக் கேட்பாயோ? என்றேன் நீயோ
வாயிதலால் 'இச்'சிட்டு நொள்ளை காட்டிச்
செட்டாகச் சென்றாயின் விளக்கைப் போட்டுச்
சென்றிட்டாய் கனவென்று தெரிந்து நொந்தேன்.

நீளாதோ இக்கனவு நீவந் தென்றன்
நெஞ்சோடு கதைசொல்லிக் கொஞ்ச அந்த
மீளாத இன்பத்தில் திளைத்துத் தேனார்
மெல்லியஇன் குமுதஇதழ் சுவைத்து வாழ்த்திப்
பாடேனா தமிழ்க்கவிதை என்னைப் போன்றார்
பார்மீதில் கொடுத்துவைத்தார் என்றென் னூரார்
நாவாட வாழேனா எனநி னைந்து
நாளோட்டி நலிகின்றேன் முடிபு என்ன?

நிலவைப் பிடித்து எழிற்
றுகிலே உடுத்த வொரு
சிலையை நிகர்த்த வடிவாள் – அவள்
கயலைப் பிடித்துக் கயம்
பயில விடுத்த இரு
மயலை வளர்க்கும் விழியாள்.

வில்லை வளைத்து அவள்
கண்ணுங் கணை தொடுத்துக்
கொல்ல விடுத்த தெவனோ? – அவன்
பொன்னைப் படைத்த கையால்
மின்னைக் குழைத்து இந்தப்
பெண்ணைப் படைத்தல் முறையோ?

வெண்ணெய் எடுத்துப் பூவின்
செம்மைக் குழம்பிற் றோய்த்துப்
பெண்ணின் இதழ் அமைத்ததேன்?–அதை
உண்ண உண்ணத் துடிக்கும்
என்னை வருத்தி நாணப்
பொன்னின் விலங் களித்ததேன்?



# அத்தானைக் காத்திருப்பேன்

''கொக்குக் குருவி யினம்
கூட்டை யடையக் கடல்
மூட்டுந் திரை யணைத்து
வெண்ணிலவு முந்தி யெழ
முற்றத்து முல்லை
முகிழ்த்து மணம் பரப்ப
பத்து மணி யடிக்கப்
பறந்தோடி வருவேன்'' என்றார்.

கொக்கும் உறங் கிடிச்சு
குளிர் மதியும் எழுந்திடிச்சு
மொக்குள் அவிழ்ந்த முல்லை
மூக்கைத் துளைச் சிடிச்சு
பத்து மணி யடிச்சு
பல நிமிடம் போயிடிச்சு
அத்தை பெத்த ஆண் மகனார்
அங்கு இன்னும் செய்வ தென்ன?

ஆட்காட்டிக் குருவி யூரை
அலட்டி எழுப்புகுது
மேற்கால் இருந்து நாய்கள்
மேல்மேலுங் குரைக்கிறது
ஊர்க்காவற் சேவகரும்
உறங்கும் இது நேரம்
பார்த்த கண் பூத் திடிச்சு
பட்ச மகன் இன்னு மெங்கே?

வெட்டிப் பிள வெடுத்து
வெத்திலையும் காம்பு நுள்ளிக்
கட்டித் தூள் மணஞ் சேர்த்துக்
கை நிறையக் கொண்டு வந்தேன்
செட்டி மகன் இவ்வளவும்
செய்வ தென்ன கொடுகொடுக்கக்
கொட்டும் பனிக் கூதல்
கொஞ்சமும் தெரியல்லை யா?

பெற்றாள் விழித் தாளோ
பேய் பிசாசுக் கஞ்சி னானோ?
அத்தான் எனக்காக
அல்லல் என்ன அடைந்தானோ
பத்தென்ற மணி விடிஞ்சு
பகலாகிப் போனாலும்
செத்தாலும் இவ் விடத்தென்
அத்தானைக் காத் திருப்பேன்.



# நெடு வழி

செங்கனி போற்றிரள் கன்னத்தையும் – ஒளி
சிந்தும் முறுவலின் வண்ணத்தையும்
பொங்கு மிளமையின் பூரிப்பையும் – தாலி
பூட்டிய போதொளிர் நாணத்தையும்
கொங்கை மலைமேவும் எண்ணத்தையும் – உன்னைக்
கூடி மகிழ்ந்தநாள் வண்ணத்தையும்
இங்கிருந் தேகணம் எண்ணிவிட்டால் – மனம்
ஏறு ரயிலெனத் தள்ளுதடி !

முல்லைக் கொடிமலர் சிந்துதடி – அங்கு
முத்து நிலவென்னை மூந்துதடி
கொல்லைப் புறத்துக் கிணற்றடியில் – குயில்
கூவினதும் உனைத் தேடியதும்
சொல்லிச் சிரித்திடக் கண்திறந்தேன் – வெகு
தூரத்தில் நீயிருந் தாயடியோ !!
எல்லையில் லாத்தாபம் மேவுதடி – இதோ
இன்றே றெயிலினில் ஏறிடுவேன்.

மாம்பிஞ்சு வெந்து மணம்பரப்ப – பனம்
மாவைக் கரைத்து உலையில் விட்டு
காம்பு ஒடித்த இலையினைக் கோலி – என்
கையினிற் றந்துநீ வார்த்த நற்கூழ்
போம்புகை மூக்கில் உலாவுதடி – இதோ
புகைவண்டி மீதினில் ஏறிவிட்டேன்
தீம்பா லமுதேஇத் தேசமெலாஞ் சுற்றி
திரியுமிவ் வண்டியென் செய்யுமடி?

எண்ணங்கள் கோடி சுமந்து கொண்டு – காதல்
இதயத்தின் மூச்சினைப் போக்கிக் கொண்டு
தென்றலைக் கனலாக்கிச் சீறிக் கொண்டு–விண்ணின்
சீத மதியைத் தீயாக்கிக் கொண்டு
தோளொடு தோள்நின் றெல்லாரும் சமமெனத்
தோளர்க ளாகித் தூங்கிவிழ
நாளொ டிரவெல்லாம் ஓடுதடி – ரெயில்
நாளை வரும்அதில் நான்வருவேன்.

தட்டுங் கரங்களைப் பிடித்திழுத்து – நெஞ்சில்
தாங்கி அணைத்துநின் தங்கமுகம்
வெட்கிச் சிவப்புற முத்தமிட்டே – பதில்
வேண்டி யிரந்து விளக்கணைத்து
தொட்ட இடமெல்லாம் சுகந்தருமே அந்த
சொர்க்கத்தைக் காணத் துடித்துநின்றேன்
பட்ட பொழுதிர விவ்வளவும் – ரெயில்
யாழடித் தோடும் நெடுவழியே.



## வாழ்வரசி வந்தாள்

தொங்கிடும் பின்னலில் என்னுயிர் பின்னினை
சூட மலர் கொணர்ந்தேன் – உடன்
கங்குலிற் சென்றனை கைவிளக் கின்றி நான்
காணத் தவித்து நின்றேன்.


ஓடையில் உன்முகச் சாடை தெரிந்திட
ஓடி யருகில் வந்தேன் – நீ
வாடை தெளித்து மணமுறத் தாமரை
வான்மல ருட்புகுந் தாய்.

சிந்தூரப் பொட்டிட்டு நின்நுதற் செவ்வியைச்
சேவித்து வாழ்த்த நின்றேன் – நீ
அந்தரத் தேயோடிச் செம்பவ ளப்பிறை
அம்புலி ஆகி விட்டாய்.

மாமரச் சோலையில் ஆவலுடன் எனை
"வா"வெனக் கூவி நின்றாய் – "காதற்
பாமலர் சூடி மகிழ்ந் திடலா"மெனப்
பறந்த தேன் பூங்குயி லாய்?

கடலிற் குளித் துடல் காட்டிநின் றாயெழிற்
காவிய ஆடை யுடன் – நான்
நடையி லயல்வர மெல்ல அடி வானில்
நழுவி ஒழித்து விட்டாய்.

கிட்ட நெருங் கிடில் எட்ட நடக்கும்
கிறுக்கினை நானறி வேன் – இனி
வட்ட மிட வரேன் ஒட்டி உறவாட.
வந்தாளென் வாழ் வரசி.





# மச்சாள்

காணாத போது கண்துஞ்சாள் கண்டவுடன்
மானாக வோடி மறைவாள் தனியிடத்தே,
'ஏனோ தான்வந்தே'னென் றெண்ணிடற்கு முன்செவியில்
தேனாகவோர்சொல் உருத் தெரியாமல் வார்த்திடுவாள்

கூடல் இழைப்பாள்நான் கூடும்நாள் பார்த்திடுவாள்
தேடும் பொழுதெல்லாம் தெருவேலிக்கண் ணொளிர்வாள்
வாடும் முகங்காணில் வந்துசுகம் கேட்குமத்தைக் (கு)
ஓதுஞ் சுகசேமம் ஒட்டிநின்று தானறிவாள்.

பூப்போல் பொலிவாள் இன் புன்னகையுட் கொப்புளிக்க
பார்ப்பாள் எனை இல்லைப் பாராள்போற் பார்த்திடுவாள்
வேர்ப்பால் தனித்திருந்தாள் விதிர்விதிர்ப்பாள் அத்தைதனைக்
கூப்பிட வாய்உன்னிக் கூவாமற் கொந்தளிப்பாள்.

எண்ணந் துடிக்கும் இதயங்கள் கௌவிவிழும்
கன்னஞ் சிவக்கும் கண்கள் கவிந்தொளிரும்
சின்ன இடைதுவளுஞ் சிற்றடிகள் நிலங்கீறும்
''இன்னுஞ் சுணங்குவதேன்'' என்றுமனஞ் சீறிடினும்

தொட்டிடற்கு நாணித் தூரநின்றேன் அவ்விடத்தை
விட்டிடற்கு இன்றி விம்மியெழும் நெஞ்சகத்துள்
தட்டு மிதயத்தைத் தாங்கித் துடித்தபடி
இட்டம் அறியமனம் ஏங்கியது அந்நேரம்

கொட்டியன குவளைகள்நீர் குனிந்தபடி கண்டருகே
சிட்டாகச் சென்றேன் சேர்த்தணைத்து அழுவதுமேன்
கட்டுக் கரும்பேஎன் சற்பகமே கவியுலக
வட்டக் கலைமதியே வான்சுடரின் முழுஒளியே?

என்ன நினைத்தோ எதற்கோ அழுதாய்நீ
விண்ணின் நிலவெடுத்து விளையாட விரும்பினையோ
பொன்னை மணியைப் பொலனணியைக் கேட்டனையோ
அன்னை தடிந்தாளோ ஐயற்கு அஞ்சினையோ?

இன்பப் பெருஞ்சுனையே என்னுயிரின் பாவாய்
துன்பம் உரைத்திடவை துகளாகு மிந்நொடியில்
என்னுவி ஈய்ந்தும் எதிர்த்துனது துன்பமெலாம்
மண்ணாகச் செய்வேன் மணியே அழவேண்டாம்.



என்றணைத் தேன்கைகள் இறுக்கஅவள் முகம்நிமிர்த்திக்
கன்றிச் சிவந்த கனியிதழை மெலத்திறந்து
''மன்றல் புரிய மாட்டாயேல் இப்பொழுதே
கொன்றுவிடு''. என்றாள் குயிலாள் திகைத்துவிட்டேன்.

கரும்பைச் சுவைப்பதற்கு கைக்கூலி கேட்பதுண்டோ?
விரும்பிநின்றேன் மயிலேயுன் விருப்பம் அறியநின்றேன்
தரும்போதை வெறியடிநீ தந்தளிக்கும் கள்ளடிநான்
இரும்பேநான் காந்தம்நீ! ஈருடற்கு ஓருயிரே!

கண்டால் உயிர்தளிர்க்கும் கனிமொழியால் மெய்சிலிர்க்
கொண்டால் விடுவேனோ கோகிலமே சத்தியமாய் [கும்
செண்டே மணப்பேன்என் செந்திருவை எனத்தேற்றி
வண்டாடு கூந்தல் வார்குழலைத் தொட்டிழுத்து

பக்கத் திருந்தவொரு பாயெடுத்துப் போட்டிருத்தி
செக்கச் சிவந்தஅவள் செவ்விதழில் முத்தமிட்டேன்
வெக்கத் துடனெழுந்து ''வேண்டாமிப் போதுஇது
பக்கத்துளார்எவரும் பார்த்துவிடு வார்கள்'' என்றாள்

கானத் தெழில்மலரைக் கையிற் பறித்ததின்பின்
மோனச் சுவைமணத்தை முகராமல் எறிவதுண்டோ?
வானத் தமுதேவா வந்துவிடு நான்தரியேன்
ஈனமுமுண் டோநாங்கள் இருவருமொன் றாகியபின்

என்றெழுந்தே சென்றேன் இன்பச்சுனை விழுந்தே
குன்றெழுந்த வாறு குமுறி எழுந்ததனம்
கண்டுவக்க நெஞ்சம் கைகள்பூம் பந்தாடக்
கெண்டைவிழி நீலம் கிளர்ந்துசிவப் பேறியதே

ஆருயிரே நாங்கள் அரியஉயிர் ஒன்றானோம்
ஏது வரினும் இடர்கள்பல சூழ்ந்திடினும்
மாது - எனக்கே மாலையிட வேற்றவொரு
தேதி குறித்துத் தெரிவிப்பீர் என்றுரைத்தாள்.

'ஆம்' என்று சொல்லி அகன்றேனவ் வீடத்தைவிட்டு
'போய்வாரும்' என்று போகவிட்டுப் பார்த்துநின்றாள்
தேனுண்ட வண்டு திரும்பவுமச் செம்மலரில்
மாலுண்ட துண்டோ மனிதனுமவ் வாறாமோ?

'இன்றுமட்டும் இன்றுமட்டும்' என்றுசொல்லித் திங்கள்பல
சென்றுசென்று மாறஅவள் சிறுதுருவில் மாறுபட்டாள்
மன்றலின்றி மணிவயிற்றில் மைந்தனுமே வந்துவிட்டான்
கண்டுவிட்டாள் அத்தைதன்னைக் கண்ணீரால் கழுவிநின்றாள்.

ஓடிவந்து எந்தைமுன்னே ஒடுங்கிநின்று அச்சமுடன்
மோடியவள் வயிற்றிற்சேய் மூன்றுதிங்க ளாச்சுதண்ணா!
கேடினுக்கிங் கேதுசொல்வேன் கிருட்டினனின் லீலையினால்
பாடெனக்கு வந்ததெனப் பதைபதைத்தாள் கையுதறி.



கிருட்டினனென் றானுடனே கிளர்ந்தெழுந்து நின்றஎந்தை
வெருட்டினார் "அடியேநீ வேசியடி என்சிறிசை
மருட்டிப் பிடித்துவிட்டு மாய்மாலஞ் செய்யுமுன்றன்
உருட்டுப் புரட்டுகளை உலகம் அறியாதோ?

நஞ்சைபுஞ்சை ஒன்றுமின்றி நகைநட்டுத் தானுமின்றி
பிஞ்சுக் குழந்தையைநீ பிடித்துவிட நினைத்துவிட்டாய்
வஞ்சகியுன் னோடுறவு வைப்பதற்கு நாங்களில்லை
நெஞ்சுதனில் லாபமில்லைக் கிட்டவும்நிற் காதே"யென்றார்

"போடிபோ என்னுடைய பொடியன்இனி அங்குவரான்
தேடிப்பார்த் தார்க்கும் தெரியாமற் கட்டிவிடு
ஓடிவிடு" என்றெழுந்தார் உதைப்பாரோ என்றிருந்தேன்
வாடிநடந் தாளெனையே வளர்த்தஅத்தை வாட்டமுடன்

கேட்டேன் அழுதேன் கிளர்ந்தெழுந்த உணர்ச்சியுடன்
ஓட்டம் நடையாக ஓடினேன் அவளிடம்போய்
"மாட்டேன் இனிப்போக மாட்டேன்என் தந்தைஎன்ன
கேட்டாலும் போகேன் கேடெனக்கென் னால்வரவோ?

அத்தை" என்றேன் என்னாவி ஆரத் தழுவிநின்றாள்
'மெத்'தெனவந் தென்கரத்தை மெல்லஇழுத் தாள்மனை
இத்தனைநா ளாயவட்கு இல்லையென்று நானிருந்த [யாள்
இத்துணிவு தானிப்போ எங்கிருந்து வந்ததுவோ?

தாயாய் உழைப்பாள் தந்தையென மந்திரிப்பாள்
சேயாய் குழைவாள் சித்திரம்போல் வந்தணைவாள்
நாய்போல் என்நிழலை நத்திப்பின் னால்வருவாள்
ஆயாளாய் ஆரமுதம் அள்ளியள்ளி ஊட்டிடுவாள்.

நல்லநல்ல தீன்பண்டம் நான்உணற்கு என்றுஎண்ணி
பிள்ளைகளுக் கேயொழித்துப் பிரியமுடன் வைத்திருப்பாள்
அல்லல்எனக்குற்றிடிலோ அதைத்தனதாய் ஆக்கியவை
ஒல்லையினில் நீக்க உழைத்துள் மகிழ்ந்திடுவாள்.

அடிப்பேன் அழுவாள்கை அடித்ததினால் வலித்ததென்றால்
துடித்தோடி வந்திடுவாள் சொஸ்தமுற அடித்தகையைப்
பிடித்துநெஞ்சிற் புதைத்தழித்துப் பெருந்தனத்தால் ஒத்தமிட்டு
வெடித்தஇளம் முறுவலிலென் வேதனைகள் சிதறடிப்பாள்.

கடிப்பேனச் செங்கரும்பைக் கைமலரால் கன்னமெலாம்
தொடிப்பாள் அமுதுசிந்தி நோய்தீர்க்கும் மருந்தாவாள்
படித்தகல்வி ஒன்றுமில்லை பாசத்தாள் என்னுளத்தில்
பிடித்தஒரு சிறுஇடத்தைப் பெரிதாக்கி அடிமைகொண்டாள்.

உடம்பை அலட்டாமல் ஊர்வம்பு பேசாமல்
மடங்கள் மதகுகளில் மாற்றாரோ டாடாமல்
விடங்கள் பழகிருட்டில் வீட்டைவிட்டுப் போகாமல்
அடங்கண் முறைகளுடன் அடங்கி யிருக்கவைத்தாள்



கட்டுண்டு கிடக்கக் கடுகளவு மிஷ்டமில்லை
விட்டிடுவேன் அந்த விடயம் புரியவில்லை
பட்டுடலால் மோதிப் பதைபதைக்கச் செய்திடுவாள்
சுட்டுவிழி யாலென் சுதந்திரத்தைத் தானழிப்பாள்.

அன்பு மொழியாலும் அணைப்பாலு மென்னுடலின்
துன்பங் கண்டுள்ளந் துடிக்கும் அருளாலும்
என்புருகக் கண்கள் இரண்டுக்கும் நீராலும்
பண்போ டெனையடிமைப் படித்திவிட்டாள் எஜமானி

அந்நாளிற் காதலித்தோம் அவளோ முறைமச்சாள்
சின்னாளில் நாங்கள் திருமணமுஞ் செய்துவிட்டோம்
பின்னாளில்எனக்கோர் பெருந்துணையாய் அருகிருந்தாள்
இந்நாளோ என்றன் எஜமாட்டி ஆகிவிட்டாள்.



## புலவர் மணி
## சரவணையூர் தில்லைநாதப் புலவர் அவர்களைப்
## பாராட்டி வாழ்த்தியவை

---

தில்லைநா தப்புலவ! திருந்துநற் புலவ ரேறே!
ஒல்லைவா வருக வென்று உவந்துனை வரவேற் கின்றோம்
நல்லைநா வலரின் பண்பும் நவாலியூர்ப் புலவர் வீறும்
தெள்ளிய அறிவுங் கொண்ட திருவினாய் வருக வாழி!

பாண்டியன் சேரன் சோழன் பாரியின் றில்லை யெம்மை
ஆண்டிட இருப்பா ராகில் ஆனைமேல் உம்மை ஏற்றி
வேண்டிய தெல்லாந் தந்து விருந்தளித் துவக்குங் காட்சி
ஈண்டியாங் காண்ப தன்றோ இன்தமிழ்ப் புலவ வாழி!

மற்றவர் மகிழப் பாடி மகிழ்வுகண் டுளங்க ளித்துக்
கற்றவர் வியக்கப் பேசிக் கவிதைகள் நயந்து காட்டி
திக்கெலாம் புகழச் செவ்வேள் திருவடி வழுத்தி வாழ்த்தும்
அற்புதக் கவிஞ பல்நா ளுண்டிவண் வாழி வாழி!



குறையெனிற் கடிந்து கொண்டு குணமெனிற் புகழ்ந்து போற்றும்
நிறைகுணம் எவற்கு மஞ்சி நின்றிடா தெதிர்க்கு மாண்மை;
மறைபொருள் அறிந்து துய்ப்போர் மகிழ்ந்திட இனியசொல்லால்
முறையறிந் துரைக்கு மாற்றல் முனிவனே! புலவ! வாழி!!

பொன்னுடை போர்த்தும் நிற்குப் பொற்கிழி அளித்தும் சீர்
விண்ணிடை நிலவு மேகத் திரையினை விஞ்சல் ஒக்கும் [த்தி
ன்னைய உணர்ச்சி தூண்ட நாமிதைத் துணிந்தோம் அற்ப
புன்மையைப் பொறுத்து ஏற்றுப் புலவநீ வாழி ஊழி!

தில்லைச் சிவனுக் கோர்பா திகழ்திரு நல்லைக் கோர்பா
பள்ளம் புலத்து வேற்கோர் பாட்டெனப் பலநூ றாக்கி
உள்ளம் உருகப் பாடி உலப்பிலா ஆனந் தத்தேன்
அள்ளிப் பருகுந் தில்லை நாதனே வாழி ஊழி!

பொற்கிழி அளிப்பின்போது பாடியது

# வேந்தனார்

செந்தமிழின் தேன்பொதிவாய் திணவெடுத்த
திண்தோள்கள் அகன்ற மார்பு
சந்ததமும் தமிழ்வாழத் தலைப்பெய்து
பணிபுரியும் தகைமை உள்ளம்
மூந்துமவைத் தமிழ்ப்பேச்சில் முன்னெவரு
மில்லாத முதல்வோய் வேந்த!
வெந்தழலும் தமிழ்ச்சுவையை விரும்பியுணக்
கொடுத்திங்கு வேகின்றாயோ?

x x x

''ஐந்தடுக்கு மாளிகையில் அமளி மீது
அரிவையர்கள் அடிவருட ஆடிப் பாடி
இந்திரப்போ கஞ்சிலபேர் துய்க்க நாட்டில்
ஏழைகளாய் எச்சிலுக்காய் ஏங்கும் பல்லோர்
இந்தவுல கிருக்கும்வரை இறைவ னுக்கிங்
கிடமேது?'' என்று அறை கூவி நின்ற
சுந்தரநற் கவியரசே! வேந்த! நின்நா
சுடருண்ண அமரருல குய்க்கின்றாயோ?



சொந்தவொரு முயற்சியினால் தமிழைக் கற்றுத்
துலங்குமருட் பெருங்குணத்தால் உலகிற் கெல்லாம்
தந்தகவி ''அம்மா'' இந் நாட்டின் செல்வத்
தமிழ்ச்சிறுவர் மழலையெலாந் தவழ வைத்தாய்
கொந்தளிக்கும் உணர்ச்சியினாய் புலமை வீறு
கொண்டமகா கவியின்பத் தமிழ்சொல் மேடை
வந்தபெரு நாவலனே நின்சீர் இந்த
வையமெலாம் பரவிநனி வாழ்க! என்போம்.

x x x

செந்தமிழின் உயிர்மூச்சு தீம்புலவர்
திறலாய்ந்து பேசுஞ் செந்நா
கந்தனருட் கேங்கிநிதம் கவிபாடும்
பேரிதயக் கருணை நெஞ்சு
சுந்தரநல் லெழிலுருவம் தோன்றியநல்
நாட்டுயர்வில் தோய்ந்த அன்புப்
பந்தமுள நாகேந்திரம் பிள்ளைஎன்ற
பாவலன்க, வேந்தன்பேர் பரவுவோமே!

# தமிழ் உயிர்ப்பதுவும் போச்சோ ?

எண்ணத்தின் பொற்சு ரங்கம்
        எய்தினோர் தம்மைத் தன்னுள்
வண்ணத்தால் வயப்ப டுத்தி
        வாழ்வளித் தவகை கொள்ளும்
திண்மைத்தோள் செம்மற் சேய்பொன்
        குமாரவேற் பிள்ளை சங்கம்
முன்வைத்த தமிழ்மேற் காதல்
        முற்றிய மூதறி ஞ்ஞன்.

தமிழ்மொழி வாழ்த்தும் நெஞ்சு
        தமிழர்சால் புணர்த்தும் பண்பு
புவிபொருள் கொடுத்தும் நூல்கள்
        போற்றிடும் புலவன் மேதை
கவினுற மண்டை தீவுக்
        கந்தன்வாழ் கோட்டம் புக்கு
அமிழ்துரை புகல்வான் தம்மை
        அண்டினோர் தமக்கெந் நாளும்.



அகப்பொருட் டுறையும் வீரம்
        ஆண்மையென் றிவைம லிந்த
புறப்பொருள் பலவுங் கற்றுத்
        தமிழர்தம் பொற்கா லத்தை
மறப்புறு வகையில் ஆய்ந்து
        மாந்தியும் மற்றோர்க் களித்தும்
சிறப்புடன் வாழ்ந்தோன் எம்பொன்
        குமாரவேற் பிள்ளை மன்னே!

தமிழ்த்திறம் சொலஆ ளில்லை
        தண்டமி ழறிஞர் இந்த
இமிழ்திரை உலகந் தன்னில்
        எங்கிருந் தாலும் அன்னோர்
புகழ்விரித் தோதி நின்ற
        பொன்குமா ரோடு ஒன்றித்
தகவுற இருந்த மும்மைத்
        தமிழுயிர்ப் பதுவும் போச்சோ ?

# நலன் புனைவு

கொண்டல் அளித்த நீண்டகரம்
கொடுத்துக் கொடுத்துச் சிவந்தொளிர
விண்ட புகழ்பேர் இமயவரை
விளக்காய் விளங்கி மிளிரநறுங்
கண்டின் இனிய சுவைமொழியும்
கற்றோர் நட்பும், பலபொதுமைத்
தொண்டும் திருவும் கொண்டநனி
துய்யன் நீதி ராசாவே

நிகர்முன் எவரும் உவமையிலா
நீதி ராச! நின் அன்பில்
உருகும் உள்ளோ டுனைஏத்தி
உவந்து மகிழ்ந்து வரவேற்றோம்
பெருகும் கருணைக் கடலனையாய்
பெட்பார்ந் தியன்ற பேரறிஞ!
"வருக! வருக! வாழ்க!" என,
வாழ்த்தும், நல்வர வாகுகவே!



பணிவால் உலகைப் பணிவிக்கும்
பண்பால் உயர்ந்து நடுநிலைமைக்(கு)
அணியாய் நீதி பதியாகி
அகிலம் போற்றும் இசையாள!
துணிபோ டேற்ற தொழில்கள்பல
தொடக்கிப் பொருளால் வரும்மிடிமைப்
பிணிதீர் விறலோய்! நின் ஆற்றல்
பேசிப் பரவிப் புகழ்வோமே!

நிலையங் காணில் அவையெல்லாம்
நீதி ராசாப் பெயர்நிற்கும்,
கலைகொள் அரங்கெல் லாம்நின் றன்
கைவண் ணத்தால் கவினுறும்
மழையொன் றிரண்டு கைவள்ளலை!
மதிதோய் மாடம் பலநினைவாம்,
சிலையிற் காண்போம்; நினக்குஅது
சிறிது; கீர்த்தி மிகப்பெரிதே!

ஊரார்க் குவந்து ஊருணிபோல்
உற்றார் மகிழ "வள்ளல்" எனும்
பேராற் சிறந்து உலகெங்கும்
பேச "நீதி ராசா" வென்(று)
ஆராத் தமிழ்க்கா தலினால்மேல்
அரச அவைக்கே ஒளிகூட்டி
சீராற் பொலிந்து பல்லூழி
சிறந்து வாழி சேமமுடன்!

அன்பு தொண்டு அருள்ஆண்மை
அறிவு பொறையென் றிவைஒன்றித்
"தஞ்சம்" எனவந் திடஅபயம்
தந்து தாங்கும் தடந்தோளா!
என்பும் பிறர்க்கு உவந்தீய்ந்து
இன்பங் காணும் நீயன்றே!
முன்புப் பொற்றோர் தனைவாடும்
முல்லைக் கீய்ந்தாய்! வாழியநீ!

"பொய்யர் குகையாய் சூழ்ச்சிகட்குப்
புகல்நல் இடமாம்" அரசினியே
உய்யும், தரும! நின்வரவால்
உயரும் "செனட்டர்" எனும்பதவி
மெய்யும் வாழும், நின்பேரில்
மேவிப் பிழைத்த துயர்நீதி,
ஐய! வருக! அறம் நின்னை
அணைந்து வாழப் பல்லூழி!!

திரு. த. நீதிராசா ஜே. பி. அவர்கட்கு சாவகச்சேரியில்
நடந்த வரவேற்பில் பாடப்பட்டவை.



# பிரியாவிடை

...Call: 583960

கன்னித் தமிழால் உலகாளக்
கருத்துக் கொண்டு பொதுவுடமைக்
கெண்ணித் துள்ளும் இளைஞர்களை
எய்திக் கொஞ்சும் வேலணையூர்க்(கு)
அன்னை யொத்த கல்லூரிக்
கதிபராகிக் கலைவானில்
மின்னிச் சுடரும் கந்தையா!
மேலோய் வாழி வாழியவே!

அன்புத் தமிழ்போல் ஆங்கிலமும்
அறிந்தார் விஞ்சும் வேலணையார்
எங்குற் றிதனைக் கற்றனரோ
என்றே அயலார் பலர்ஏத்தும்
பண்பைத் தந்தாய் கந்தையா!
படரும் நிலவே! பாய்நதியே!
முன்புச் செய்த தவந்தானோ
முதல்வோய் நின்னை அடைந்ததுயாம்?

முருகார் உள்ளப் பேரிசையால்
முனியா நெஞ்சால் செயல்முறையால்
அருகார் நிற்பர் பணிசெய்தற்(கு)
அஞ்சா தொழுகும் கலைமணியே
கருமா முகில்போல் எம்மோர்க்குக்
கனிந்து பெய்த கவிதைமழை
பெருகா நிற்றல் கண்டும்உன்
பிரிவால் நெஞ்சம் உருகாதோ ?

பண்ணி வகுத்த முறைப்படியே
பயிற்றி அன்பாய் மாணவரை
எண்ணி யெண்ணி அவரவரை
ஏற்ற முறையிற் போதிக்கும்
உன்னை யன்றி எம்மவரை
'உயர்த்த' என்று நினைத்தவரை
இன்னும் நாங்கள் கண்டறியோம்
இதமாய் வாழி கந்தைய!

ஊரார் உண்ணும் ஊருணிபோல்
உயர்வான் ஊரும் மாமதிபோல்
சார்வோர்க் களிசெய் தருநிழல்போல்
சமமாய் எவர்க்கும் தாயருள்செய்
பாரோர் போற்றுங் கந்தைய
பணிவால் உலகைப் பணிவிக்கும்
சீரோய் பிரிவால் திகைத்தனமால்
சிறந்து வாழி திசையெல்லாம்.

---

* மாணவனாக இருந்த காலத்தில் வேலணை மத்திய கல்லூரி அதிபராக இருந்து மாறிச் சென்ற அதிபர் திரு. ஏ. கே. கந்தையா அவர்கட்களித்த பிரியாவிடையின்போது பாடியவை.



# திருமண வாழ்த்து

பணிவு கனிவு அருளுடைமைப் பண்பு பண்டு செய்ததவத்
துணிபே அறிவு பொறைநீர்மை துரிதம் ஓங்கும் நடுநிலையாம்
அணிகொள் ஆசான் தொழில்தன்னை அறத்திற் காகத் தலைப்
மனிதர்க் கொருவ மகாலிங்க மன்ன வாழி பல்லூழி! [பூண்ட

கற்புக் கிவளே கலைக்கிவளே காதற் கிவளே எனமிக்க
பொற்பார் புஷ்ப ரத்தினமென் பூவை மகிழ வருகொழுந!
மிக்கோர் பெற்றுச் செல்வமெலாம் மேனி வாழ்நர் தாம்உமது
நற்சீர் பற்ற மாதிரியாய் நனிவாழ் நனிவாழ் நனிவாழி!

தமிழை உயிராய்ப் பரிமாற்றி தன்னாற் றலினால் அதன்வாழ்வு
பனிமேல் உயர முனைப்போடு போற்றும் நல்லாசிரியனை
அமிழ்தே யனையாள் துணையாக அடைந்தாள் வாழி பல்லூழி
தமிழ்போல் இனிமை இளமையெனும் தகவெல் லாம்பெற்
றனியுடனே!

இட்டுந் தொட்டும் அழைந்தாடி எச்சில் மிசைந்து பிசைந்தகரப்
பட்டென் மேனி பூதூளி படாக் குறும்பு மொழிதவழக்
கட்டி முத்தம் பலசேர்க்குங் காதற் சிறுவ ரொடுபேறீர்
எட்டும் பெற்று இல்லாண்டு இசையோ டென்றும் வாழியவே

---

¶ நண்பர் ஒருவரின் திருமணத்தின் போது பாடியவை.

# தருமயுத்தம்

## நாடு

“பூமகள் மார்பிற் கொண்ட
புனைமணிப் பதக்கம்” என்றும்
மாமகள் நுதலின் மின்செய்
மரகதத் திலக மென்றும்
நாவலர் பலரும் போற்ற
நாவலந் தீவின் தென்பால்
வாவலைக் கடலின் நாப்பண்
வளந்தரும் ஈழ நாடு. 1

பூமலர் கயங்கள் அன்னப்
புள்மலிந் தழகு கூட்ட
தேமது உண்டு வண்டு
செவ்வழி மிழற்ற எங்கும்
காமிகுத் தழகு ஞாலக்
கவின்பல காட்டக் கண்டோர்
காமமுற் “றுகா ஈதே
கற்பக நாடெ”ன் றேய்வார். 2



வெண்திரை மோதி வீழும்
வீரமா நகரைத் தன்கை
கொண்டுமேல் வருடி இன்பம்
கொடுக்குமா வலியென் றுறு
தந்தநற் செல்வந் தாங்கி
தருக்கிவாழ் ஈழம் பண்டே
வந்தவற் கெல்லாம் ஈய்ந்து
வாழ்வளித் துவக்கும் நாடு. 3

நால்வகை நிலமும் குன்று
நல்வளம் நான்கும் ஈய
நால்மதப் பண்பும் ஒன்றி
நனிபயன் விளைக்க மக்கள்
மேலவர் கீழ்என் றின்றி
விருந்தளித் துவந்து அட்ட
சீலமும் சிறக்க இன்பாய்
சேர்ந்தொளிர் ஈழ நாடு. 4

மஞ்சுலாம் மலைகள் செந்தேன்
மாநதி சுரக்கும் செல்வம்
விஞ்சுபேர் தொழில்கள் ஆங்கு
விளங்கிட உழைக்கும் மக்கள்
கங்குலும் பகலுந் தங்கள்
கடமையில் வழுவா நிற்கும்
பொங்குபேர் வலியால் வையப்
புகழ்கவர் ஈழ நாடு. 5

வனமுள யானை முத்து
வளமுள கடல்கள் மங்கை
கனமுலை போலுங் குன்று
கணக்கில நீண்ட சாரைக்
கிளமென நெளித்து ஓடும்
இந்நதிக் கிளைகள் எங்கும்
மணமுறத் தென்றல் ஏவி
மதுகரம் அழைக்குஞ் சோலை.

வயலெலாஞ் செந்நெல் செய்யின்
வரப்பெலாம் கமுகுந் தெங்கும்
கயலுலாஞ் சுனைகள் ஆம்பற்
கவின்மலர் அழகு காட்டும்
செயலெலாம் அறத்தின் சாயல்
தேஜசும் திறமும் விஞ்சும்
புயமெலாம் வீர மங்கை
புகலிட மாகக் கொண்டாள். 7

மன்னர்கள் தொட்டுக் குன்று
மாதிரு வளர்த்து “ஈழம்
பொன்னகர்” என்று வேற்றூர்
புகுந்திடப் புதுமை செய்யும்
நல்லிசைக் குளங்கள் சூழ
நாடிவந் திருப்போர்க் கெல்லாம்
இல்லையென் னாது ஈய்ந்து
இன்னல்தீர் இசைகொள் ஈழம். 8



வானுறு புகழால் வையம்
வாழ்த்துமின் தமிழும் கொம்புத்
தேனுறு சுவையின் மிக்க
சிங்கள மொழியும் ஈழத்
தாளிரு விழிக ளாகத்
தமிழர்சிங் களரென் றெல்லேம்
நாளிர வொன்றி இன்ப
நனிபயன் துய்க்கும் நாடு. 9

விண்ணுற ஓங்கி மேகம்
வீழ்ந்துற வாடப் பொன்னின்
மின்னிறம் பிறங்குந் தூபி
மேன் நிலைத் தாபகங்கள்
எண்ணில விகாரை கோவில்
எழில்மிகு சமாதி மல்க
பொன்லழற் போதித் தேவன்
பூங்கழல் புனையும் நாடு. 10

சிவன்திருப் பாதந் தாங்கி
சேணுயர்ந் தொளிருங் குன்றும்
அவன்திருக் குமரன் ஆடும்
அருட்கதிர் காமத் தோடு
நலத்திரு கோண ஈசன்
நண்ணிடும் பதியும் நன்செய்ப்
புலம்பல பொலிந்த கேதீஸ்
வரமுஞ்சேர் புனித ஈழம். 11

கைவண்ணத் திறத்தால் வானக்
கன்னியர் மலர்கொள் காட்சி
மைவண்ணத் தாக்கிச் சிங்க
மலைக்குகை அமைத்து தாங்கள்
எவ்வண்ணம் வாழ்ந்தும் என்று
எள்ளிடு வோர்கள் நாண
இவ்வண்ணம் என்று காட்டும்
எழிலோ வியங்கொள் நாடு. 12

## நகர்

அறிவினைப் போற்றும் புத்தன்
அருளினை வேண்டி ஞான
நெறிபயில் அறவோர் வாழும்
நீள்நிலை விகாரை தோறும்
வணபிரித் தோதும் ஓசை
வானுறுந் தானங் கொண்டு
அனநடை மாதர் செல்லும்
அணிநடை வீதி யெங்கும் 13

பூம்புனல் புகுந்து ஆடும்
பூவை முன்சுழி புகுந்து
தேம்பிடும் அவளை ஏய்த்துச்
சென்றுகால் பறிக்கும் காளை
வீம்புகண் டொல்கி வேய்த்தோள்
விலகுபூந் துகிலை மென்கை
தாங்கிடும் சரசக் காட்சி
சார்ந்தபல் சுனைகள் எங்கும் 14



குன்றுகள் நடத்தல் போலுங்
கொடிதுயர் வானில் மேகத்
திண்டுகள் திரையிற் சென்று
திணர்த்துதல் போலும் யானைக்
கன்றுகள் கருங்கற் றூணைக்
கையினாற் றூங்கி நேர்நேர்
சென்றிடுங் காட்சி ஈழத்
தெருவெலாந் தேங்கக் காண்போம். 15

கண்டியன் கூத்தும் பாட்டும்
கனித்தமிழ் இசையுங் கோட்டும்
எண்டிசை முழுது மார்க்க
யானைபின் நூறு செல்லத்
தொண்டருந் துறவு ளோரும்
தொடர்ந்து பின்வரச்சீர் புத்தன்
கொண்ட பல்விழ வயர்ந்து
குதூகலம் அடையும் ஈழம். 16

## அரசு

ஈழமென் றிலங்கும் இந்த
எழில்இடந் தன்னைப் பண்டு
சோழன்எல் லாளன் என்றோர்
சூரன்நல் லாட்சி செய்தான்
வேளமென் வலியும் வெய்ய
வேங்கையின் வீறுங் கொண்டு
நாளும்நல் லறத்தின் ஆட்சி
நடத்தினன் உலகம் ஒப்ப. 17

புத்ததா பகங்கள் செய்தும்
புதுக்கிநன் கமைத்தும் நாட்டு
மக்களின் கருத்தை ஆய்ந்து
மதித்தவர்க் கினிய செய்து
பக்கம்நல் லறிஞர் சேர்த்து
பாலிக்குந் திறத்தில் உள்ள
மக்களின் சபையுங் கூட்டி
மன்னரை சாட்சி கொண்டான். 18

வீதிகள் அமைத்தும் புத்த
விகாரைகள் எடுத்தும் வாழ
நாதியற் றிருப்போர்க் கென்று
நல்லுண்டிச் சாலை நட்டும்
சாதியிற் பேதம் நீக்கிச்
சரிநிகர் சமான மாக.
நீதில தான ஆட்சி
செய்தனன் இலங்கை முற்றும். 19

கன்றிறந் தழுத ஆதன்
கடைமணி வாயில் முட்டி
நின்றதைக் கண்டு ஆங்கண்
நிகழ்ந்ததை அறிந்து தன்சேய்
ஒன்றெனத் தெரிந்துந் "தானும்
துறுதுயர் அடைவன்" என்றே
கொன்றிட மகனைத் தேர்க்கீழ்க்
குறித்தவன் அனைய சோலன். 20



மக்களின் குறைகள் காண
மாற்றுரு வெடுத்து நாட்டுப்
பக்கமெல் லாமுஞ் சென்று
பலருடன் உறவு பூண்டு
விக்கினம் அறிந்து நீக்கும்
வித்தகன் 'ஆட்சி' யென்றால்
இத்தகைத் தென்று மற்றோர்க்
கெடுத்துரை வகையில் செய்தான். 21

ஆடக அரங்கு தூய
அறிவுரை கேட்கும் மேடை
தேடருங் கல்விச் சாலை
தேரர்வாழ் மனைஅங் காடி
நாடக மன்றஞ் சோலை
நறும்புன லாடும் பொய்கை
யோடிவை அனைத்தும் மக்கட்
குகந்ததென் றோர்ந்து செய்தான். 22

வலியவர் மெலியர் தம்மை
வருத்துதல் இல்லை நாட்டில்
புலிநிகர் வீரர் தாமும்
போர்விடுத் துழவு செய்து
நலிவுறும் உலகிற் கெல்லாம்
நவமணி அளித்துக் காத்தார்
கலிதவிர்த் திலங்கை இன்பம்
கண்டதக் காலந் தன்னில், 23

வெள்ளொளி முத்தும் யானைத்
தந்தமும் பஞ்சும் பாக்கும்
நெல்மணிப் பொதியுங் கொண்டு
நிறைந்த பொற்குவை கொடுத்துச்
செல்மரக் காயர் கூட்டம்
சேர்ந்துறை துறைகள் தோறும்
செல்வதும் மீழ்வ தாகச்
செறிந்தபல் வங்கம் சூழும். 24

திறைவரு திருவும் நட்புச்
செய்திடத் தருஞ்செம் பொன்னும்
முறைவரு வரியுங் கொண்டு
முன்னவ ருவமை யின்றி
மறைதரு நெறியில் நின்று
மன்னன் எல்லாளன் மக்கள்
குறைசொலற் கின்றிக் கொற்றக்
குடைநிழல் இனிது காத்தான். 25

## புரட்சி உரை

இந்நிலை இலங்கை வேந்தன்
இருந்திடும் போது நாட்டின்
பின்னணி ஒருவன் மக்கள்
பேதமை கண்டு சொல்வான்
''என்னதான் செய்தும் என்ன?
இவன்பிற நாட்டு வந்த
அன்னியன் எம்மை எல்லாம்
ஆள்வதோ அடிமை நாமோ? 26



சிங்கள நாட்டுக் குள்ளோர்
சிறுநரிக் கூட்டம் வந்து
மங்கள வாழ்த்தொ டாளும்
மன்னராய் ஆவ தென்னே!
எங்களை நாங்கள் ஆள்தல்
ஏற்றது அன்றி மாற்றான்
'தங்க'மென் றதனால் ஏற்றுத்
தலைபணிந் துய்ய லாமோ? 27

ஆண்டிடத் தமிழர் நாமிங்
கடிமையோ பண்டைம் வீரம்
மாண்டொழிந் ததுவோ வேங்கை
மாணினைப் பணிதல் உண்டோ?
கூண்டினிற் கிளிபோல் எம்மை
கொண்டனர் தமிழர்! நாங்கள்
வேண்டிய தெல்லாம் ஈய்ந்தும்
விடுதலை ஈயார் கண்டீர் 28

வீங்குதோள் வீரர் தங்கை
வேல்முனை முறிந்தென் னாளோ?
தாங்குதோல் உறைவாள் மீசு
தடம்புரண் டுடைந்த தெய்யோ?
ஈங்கினி அடிமை வாழ்வே
ஏற்றதென் றிருந்தீர் நன்றே
மாண்புகழ்ப் போரில் முன்போய்
மடிந்தவர்க் கையோ! ஐயோ!! 29

ஆரியத் தலைவா! விண்ணை
ஆழுவாய் நீநா மிங்கே
வீரியம் இழந்து நாய்போல்
வீணர்க ளானோம் நின்றன்
பேரினுக் கெம்மால் என்றும்
பெருங்கறை இலங்கை மக்கள்
சீரினை அறிதி! மாற்றான்
சேவகம் சிரமேற் கொண்டார். 30

மன்னனும் எந்தை இந்த
மறத்தமிழ் அரசற் கஞ்சி
என்னைவாழ் கென்றான் இஃது
ஏற்குமோ ஆரியற்கு?
பெண்ணையர் அவர்க்கென் கையால்
பெண்ணுடை கச்சு கூந்தல்
இன்னபல் அணிகள் சேர்த்து
ஏற்றதென் றனுப்பி வைத்தேன். 31

என்னையோர் துட்டன் என்று
ஏசுதல் அறிவேன் வையம்
அன்னியன் எந்தாய் நாட்டை
ஆள்வதைக் கண்டும் வாழ
எண்ணியிங் கடிமை செய்து
இருந்திடேன் அடுபோர் கண்டேன்
புண்ணுடல் விழினும் பொன்றாப்
புகழுடம் போடு வாழ்வேன்.'' 32



என்றறை கூவித் தென்பால்
எழுந்தனன் கைமுனு வேந்தன்
குன்றனை தோளன் சிங்கக்
குலப்புகழ் நிறுவுங் கோளன்
நின்றிடு பகையை ஓட்டி
நீள்முடி தரித்து நாட்டை
வென்றிடும் ஆவல் தூண்ட
வீரர்கள் பலரைச் சேர்த்தான். 33

தாய்த்திரு நாட்டின் பூட்டைத்
தகர்த்துடைத் தெறியா தோய்ந்து
போய்த்துயில் கொள்ளேன் இன்பம்
புல்லிடேன் அமுதைச் செந்தேன்
தோய்த்தெடுத் தடினும் உண்ணேன்
தோழரே! இவைசெய் வேனல்
தாய்ப்பிறப் பெடுத்துச் சூழும்
நரகெல் லாம் அலை வேனக! 34

உறுகுனை வேந்தன் பேச்சு
உலுக்கிடக் கிளர்ந்த நெஞ்சில்
பெருவலி புரள ஈழப்பெரும்
படை திரண்ட தாங்கே
பொருதலுக் கமையுங் காலப்
பொழுதினைப் பார்த்துச் செல்வோர்
ஒருசிலர் அல்லப் பல்லோர்
"உண்டினி வெற்றி" என்பார். 35

நல்லவன் ஆயின் என்ன
நம்உயர் இனத்தைத் தன்வாள்
வல்லமை கொண்டு ஆண்டு
வந்தவன் தமிழன் என்று
சொல்லும் எம்சரிதம் என்றான்
சுழித்த செம்முகங்க ளெல்லாம்
வில்லொழிச் சூலம் ஈட்டி
வேலொடு களத்தில் கண்டான். 36

களங்காணல்

ஓடிவந்தொரு தளபதி கூறினன்
"உறுகுனைப் படை எம்அரண் நோக்கியே
பாடி கொண்டனர்" செய்தியைக் கேட்டதும்
பதைத்த லின்றிஎல் லாளன் பகருவான்
"தேடிவந்தஇச் செம்படை முன்னரே
செய்ய வேண்டிய போரினைச் செய்யவே
நாடிவந்தது நல்லது நாமினி
நடத்துவோம் மறப்போர்" எனக் கூறினன். 37

அரனைக் காத்திட வேற்படை புறமதில்
அகழி காத்திட விற்படை செல்லவும்
புரவி வெம்படை நகர்வலம் காக்கவும்
போதகப் படை பகைவரைத் தாக்கவும்
விரைக என்றபின் "பர்வதம்" என்றதன்
வேளம் ஏறியப் போர்முனை நோக்கினன்
முரச திர்ந்தது இருதிறப் படைகளும்
முட்டி மோதிட எதிரெதிர் நின்றன. 38



"கந்துலன்" எனும் யானையில் ஏறியே
காளை காமினி முன்வந்து நின்றனன்
ஐந்து பத்து அகவைக்கு மேலுள
அரசன்எல் லாளன் அவன் எதிர்வந்தனன்
சிந்து பாடியங் கெதிர்வந்து ஆர்த்திடும்
செந்தமிழ்ப் படை கண்டனர் சிங்களர்
நொந்து சாம்பி வெதும்பும் உளத்தொடு
நொடியிற் களம்விட்டு ஓடிட நின்றனர். 39

கண்டு காமினி கலங்கிட எல்லாளன்
கருணை பொங்கும் அருள் விழிநோக்கொடு
"பொன்றிப் பல்இளம் வாலிபர் போனபின்
பூமியாள்வதில் புண்ணியம் என்னகாண்
அன்ற சோகன் என்னுமோர் மௌரியன்
அமர் வெறுத்துநற் தர்மத்தை ஏற்றதால்
இன்று நீரும்உன் கிளைகளும் புத்தனின்
இந்நிழற் பதம் இறைஞ்சுதல் ஓர்மினோ 40

புத்தர் நல்லறம் போற்றுமிப் பூமியில்
போரில் பல்லுயிர் போக்குதல் ஏற்றமோ?
ஒத்த பாச உணர்வுள எம்மினம்
ஒருவர் மற்றவர்க் கூறு விளைப்பதோ?
தத்தம் செய்து இவ்வாட்சியை நின்வசம்
தானமாக்கின் நின் தகுதியும் ஆண்மையும்
மற்றவர்க் கிழிவாய்ப் படும் என்றதால்
மன்ன சிந்தனை செய்கிறன் என்னுளே! 41

ஒன்று சொல்கிறேன் உன்னுடன் நான்தனி
ஒன்றிப் போர்செயின் உயிர்பிற சென்றிடா
இன்று போர்செயின் என்னுயிர்த் தோழர்கள்
எதிர்த்து நின்படை ஒறுத்துயிர் போக்குவர்
சென்று நாளைவா உன்படை யோடிங்கு
சிறிய ஓர்படை கொண்டுனை மோதிநான்
பொன்றின் ஆழுதி !” என்றனள காமினி
புரிந்திடா வகை ஏகிலன் பாசறை. 42

### போர்

முரசதிர்ந்தது நகர்ப் புற வாசலில்
மூன்று நான்குமெய்க் காவலரோ டொரு-
இரவிபோல் ஒளி காலத்தன் யானைமேல்
இந்திரன் என எல்லாளன் வந்தனன்
சதுரச் சேனைகள் சூழ்ந்து புடைவரச்
சமர்முனை நந் தங்கு வந்தனம் காமினி
எதுவுஞ் செய்திடல் இன்றிஅம் மன்னவன்
எழிலைக் கண்டுபோர் எண்ணம் மறந்தனன். 43

காமினி உளம் கண்டஅக் காவலன்
கடுகித் தன்கரி ஓட்டிஅக் கந்துலன்
அருகிற் சென்றுடை வாளை உருவி ‘யிங்(கு)
கமர் மலைந்திடவா” வெனக் கூவினன்
பொருதற்கே மனம் பொருந்த மறுத்துமென்
பொருதியே தீர வேண்டுமென் றுனைதால்
உருவி வாளினைக் கொண்டு மலைந்தனன்
உலகம் ஒப்பில்ஓர் யுத்தத்தைக் கண்டது. 44



பொருவிற் கந்துலன் பர்வதம் தன்னையோர்
புதரில் வீழ்த்திடக் காமினி வீசுவாள்
உதிரம் சோரநல் மன்னன் எல்லாளனின்
உயிர் எடுத்துயர் உம்பரிற் சேர்த்தது
அதிரும் நெஞ்சொடு காமினி யோடிவந்
தரசன் பொன்னுடல் மெய்யொடு தாங்கிக்கண்
பெருக நின்றனன் “மன்னவர் மன்னனே
பெரும நின்புகழ் பெரிதெனக் கூறியே 45

### முடி புனைதல்

“என்னரும் உயிர்த் தோழரே இற்றைநாள்,
எந்தன் வாழ்விலோர் துக்கநாள் ஈழமாம்
பொன்னின் மாநகர் தன்னைப் பெறப்பல
போர் புரிந்தும் பெறல் எளிதாகுமா ?
மன்னன் மற்றுயிர் மாய்த்திட எண்ணிலன்
மனிதர்க் குள்ஒரு மாதெய்வம் ஆகினன்
தன்னுயிர் தனைப் போக்கிஇந் நாட்டினைத்
தந்தனன் இது தருமம்என் றெண்ணியே. 46

ஆய சேனைகள் அனைத்தையுங் கொண்டவன்
அமர்புரிந் திடில் ஆடியின் சூறையிற்
போயொ துங்குஞ் சருகென எம்படை
புகுமிடம் அறியாது புலம்புமே
தாயவள் செய்த நற்றவத் தாலுஞ்சீர்
தமிழன் உள்ளொளி யூற்றத்தி னாலுமே
நாயெனக் இந்த ஆட்சியைச் தந்தசெய்
நன்றி யைமற வாமுறை செய்குவேன.” 47

என்று கூறிய காமினி நகரினுள்
　　எதிர்கொள் வார்களை விலக்கி அமைதியாய்
சென்று அங்குள்ள செந்தமிழ் மக்களைச்
　　சேர்ந்து துக்கம் தெரிவித்து இன்மொழி
நன்று கூறி அவர்களின் நல்லுரை
　　நாடிப் பெற்றுநாற் சந்தியில் ஓர்பொது
மன்றில் எல்லாள மன்னனின் பொன்னுடல்
　　மண்ணுள் வைத்துப்பூ வலையங்கள் சூட்டினன் 48

நடுகல் வைத்தனன் "அவ்வழிச் செல்லுவோர்
　　நல்ல எல்லாள மன்னனின் சால்பினைத்
தொழுது செல்லுக" என்றொரு கட்டளை
　　தோமரம் அடித் தேபறை செய்தபின்
பழுதில் ஆட்சி புரிந்திடப் பொன்முடி
　　பண்பினில் உயர் செந்தமி ழர்தர
தொழுது வாங்கி அரச பெருங்குரு
　　சூட்ட ஈழச் சுடாமுடி தாங்கினன். 49



# என்றுமுள தென்தமிழ்

---

சேரனின் சிலம்பி னுளைத் திருக்குறட் கவசத் தாளை
சீரணி மார்பிற் சிந்தா மணிதரு ஒளியி னுளைப்
பரமே கலையைக் கம்பன் பண்ணுமா முடியைச் சூடித்
தாரணி புரக்கும் செய்ய தமிழ்தனை வணங்கு கின்றேன்.

கற்றவர் கவிதை ஆய்வோர்
　　காழ்ப்புவப் பில்லோர் நண்பர்
உற்றநற் கலைஞர் மாண்பில்
　　உயர்ந்தவர் முன்இச் சின்னன்
நற்றவத் தமிழின் ஆற்றல்
　　நவிலுமிவ் நாய்ச்செ யல்தான்
வெற்றுரைக் குரைப்பென் றுனும்
　　நோக்கதற் காக ஏற்பீர்.

## வேறு

செந்தமிழீர் என்னுடைய அன்புத் தோழீர்
　　தெவிட்டாத தென்றமிழின் ஆற்றல் கூட்ட
வந்தணையும் பெரியோர்க்கென் வணக்கம் கூறி
　　வானுறுசெந் தமிழினை இசையப் பாட
எந்தனையும் அழைத்தாரே அவரை வாழ்த்தி
　　இன்கவிதை பாடிடற்கு எழுந்தேன் ஐய!
பந்தமெதோ உண்டதனால் பாடு கின்றேன்
　　பயன்எதுவோ அதனைஎதிர் பார்த்தே னல்லன்

‘தீந்தமிழ்’ என் றுரொருவன் தெவிட்டாத
இன்சுவையைத் தருத லாலே
மாந்தூர்முதன் மொழிஎன்றார் மற்றயவை
இதற்கிளமை யான தாலே
சார்ந்தமொழி பலகண்டும் சலிக்காது
இளமையொடு புதுமை எய்தி
வாழ்ந்தமொழி தமிழ்என்று வாழ்த்தினான்
ஒருபுலவன் வண்ணத் தாலே

என்றுமுள தென்தமிழ்என் றியம்பினார்க்
கனுதாபம் இறவாப் பண்பின்
நின்றமொழி என்றிடுவோர் நீட்டிமுடக்
கிடுகுதலை நிறுத்த வேண்டும்
கொன்றிடுமோர் குறிகொண்டே எம்மைஏய்க்கக்
குளறுகிறார் எனும்நோக்கம் கொள்ளல் வேண்டும்
இன்றெமது தமிழ்தனக்கு இழிவுதேட
எத்தனையோ பொறிகளெலாம் இயற்று கின்றார்

‘பழித்திட்டான் தமிழ்வீரம் பிறன்’ என் றிட்டால்
பாய்வேங்கை எனவீறிப் பொருதிப் புன்மை
ஒழித்திட்ட மறவீரம் ஒளிந்த பின்பும்
ஒன்னலரின் கூலிகளாய் நம்மில் பல்லோர்
விளித்தமுளி யோடுலவி விஷத்தைத் தூவி
‘விபீஷணம்’ செய் கின்றதனைக் கண்டும் ஐய!
ஒழித்துவிட முடியாது தமிழை என்று
உளறுவதில் பயன்என்ன அர்த்தம் என்ன?



‘எதிர்ப்பார்கள் பின்இணங்கி வருவார்’ என்று
எம்நிலையை அறிந்தெதிர்க்கும் ஏதி லாரை
துதிப்பாடி ஏவல்செய்து பருக்கைக் காகத்
துடிப்பவர்கள் வீரர்களாய் வாழும் நாட்டில்
விதிப்பயன்என் றிருப்போமால் தமிழா வாழும்?
விறல்ஆண்மை வீரமறம் என்று இன்ன
அடுக்குமொழி அகராதி விட்டு நீங்க
‘அடிமை’ என்ற பதம்ஒன்றே அடித்தி ருக்கும்.

விண்ணெட்டும் இமயமிசைக் கொடிகள் நாட்டி
விறல்பொறித்த வீரரெலாம் சலிக ளானார்
மண்வெட்டும் கூலிகளாய் உலகம் எங்கும்
மன்முடி இரந்தடிமை ஏற்றும் ஒன்றில்
பண்பட்டுப் பயந்தஞ்சும் வாழ்வு கொண்டோம்
பயனில்லை தமிழ்வாழும் என்று சொல்லல்
புண்பட்ட நெஞ்செல்லாம் புழுக்கள் தோன்ற
புகழ்கெட்ட தமிழரினால் தமிழா வாழும்?

அரிவாழ்ந்த குகைதனிலே நரியின் கூட்டம்
அழகார்ந்த பொழில்எல்லாம் புதரின் ஈட்டம்
பரியூர்ந்து அமர்போந்த வீரர் எல்லாம்
படிதாழ்ந்து அடிதாங்கி வாழும் இந்நாள்
முடிதாங்கி அரசோச்சும் மொழிகள் விண்டு
முள்ளோங்கித் தமிழ்கொள்ள முனைதல் கண்டோம்
அடிவாங்கி அடிவாங்கித் தமிழர் சாக
அழகுதமிழ் வாழும்எனில் என்ன அர்த்தம்?

## வேறு


தாம்வாழும் வீடுகளில் தமிழ்வாழ
இடமளியாத் தமிழர் இன்னும்
ஏன்வாழு கின்றாரோ யாம் அறியோம்
இந்நிலைக்கு இரங்கி நின்று
கூன்பாயும் உளத்தினர்முன் கும்பிட்டுத்
தமிழினிலே எழுதல் பேசல்
தான்நீதி என்றவரை தடிந்தோட்டும்
கயவர்களால் தமிழா வாழும்?

படையோடு சென்றுதிறை பெற்று மீண்டு
பாராண்ட தமிழர்களின் மரபில் வந்தோர்
கடையோடு சென்றங்கு கலங்கி வாடிக்
கட்டழிதல் கண்டோம்நாம் கசங்கா வெள்ளை
உடையோடு தொழில்என்ற உத்தி யோகம்
உறுவாதை தந்ததையும் உற்று நோக்கி
விடைதேடு இனிவாழ வேண்டும் என்றால்
விறலோடு தமிழ்நாடு வேண்டி ஆடு.

பாண்டியனார் இங்கில்லை பைந்தமிழ்மேல்
ஆர்வத்தை உற்சா கத்தைத்
தூண்டிவிட இங்கொருவர் துணையுமில்லை
ஆண்டுதோறும் சோம்ப லாக
வேண்டுமட்டும் வாயளந்த வீணரன்றி
இங்குதமிழ் விழைவா ரில்லை
வேண்டுவரை போர்செய்ய விறல்வீரர்
இங்கில்லைத் தமிழா வாழும்?



தன்னாட்சி பெற்றதொரு சிறுநாடும் இன்றி
தமிழ்வாழும் என்றிடுதல் சளக்கர்களின் பேச்சு
விண்ணோடு உற்றிடினும் தமிழர்களாம் நாங்கள்
விறலோடு ஒருநாடு எமக்கென்று கொள்வோம்
அந்நாடு பொன்னாடாய் உயர்ந்தோங்க எங்கள்
ஆவியுடல் பொருள்அனைத்தும் அளித்தேத்தி வைப்போம்
என்றுமுள தென்றமிழ்என் றியன்றதொரு வாக்கு
இனிதுபெறத் தமிழுபா நாளுமிங்கு வாழ்வோம்.



¶ ஏழாலைத் தமிழ் விழாவில் பாடியவை. 26—10—63

*With the best Compliments of*

# AHAMED BROS.

107, 3rd Cross Street

**Colombo-11**

Telephone: 21342

*அன்பளிப்பு*

**மா. சண்முகநாதன்**

உரிமையாளர்:

# 'ஜயந்தி பேக்கரி'

**மல்லாவி**

அன்பளிப்பு

## விநாயகர் மரவேலை நிலையம்

உரிமையாளர்: ந. வடிவேலு (இராசு)

நாரந்தனை

ஊர்காவற்றுறை

## LINGAM'S

யாழ்ப்பாணம் திறம்

சுருட்டு, புகையிலை, சோடா

சுத்தமான

நல்லெண்ணெய்

மற்றும் சாய்ப்புச் சாமான்களும்

நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளுமிடம்

**லிங்கம் ஸ்ரோர்ஸ்**

உரிமை: ச. இராசையா

26, பிரதான வீதி – அளவை

*With the best*
*Compliments of*

## NORTHERN INDUSTRIES

TYRE RETREADERSS

**8/1 STANLY ROAD**
**JAFFNA**

அன்பளிப்பு

வசந்தா ஸ்ரோர்

20, பஜார் வீதி

வதுளை

விசேஷ வைபவங்களிற் கலந்து கொள்வதற்கேற்ற

உயர்ரகச்

'சூட்டிங்கு' களுக்கு

எஸ். எச். ரெக்ஸ்ரையில்ஸ்

S. H. TEXTILES

214, Second Cross Street

Colombo.

**பீடிகளிலே ஒரு புதுமை!**

பாவிப்பவர்களுக்கெல்லாம்
பூரண திருப்தியை அளிப்பது;

# அருணா பீடி

நீங்களும் இன்றுமுதல் எங்கள்
**அருணா பீடியைப்**
பாவித்துத் திருப்தியடையுங்கள்.

# ARUNA BEEDI CO.

Prop: V. Arunagiri

**42, KANDY ROAD**
**WARAKAPOLA**

Telephone: 532



நுகர்வோரின் திருப்தியே எமது லட்சியம்

எல்லா வகையான

**புடவைகளுக்கும்**

பெண்கள் ஆண்களின்

**தையல் வேலைகளுக்கும்**

மலிந்த விலையில் உள்ள

ஒரே இடம்

**'பழுவில்'**

# PAZHUVIL DRAPERY STORES

582, Dematagoda Road
**Colombo-9**

With the best Compliments of

**The Maldivian National Trading Corp. (Ceylon) Ltd.**

78, Reclamation Road

Colombo-11

ஈழத்தில் மக்களின் விருப்பத்திற்கேற்ப
தலைசிறந்த

சித்திரங்களை அளித்துவரும்

## சினிமாஸ் நிறுவனத்தினர்

இவ்வருடம் அளிக்கவிருக்கும்

## சிறந்த சித்திரங்கள் சில

**துணைவன்**
ஏ. வி. எம். ராசன்
சௌகார் ஜானகி

✻

**சிவந்த மண்**
( கலர் )
சிவாஜி, காஞ்சனா

✻

**எங்கள் தங்கம்**
( கலர் )
எம். ஜி. ஆர்., ஜெயலலிதா

✻

**அக்கா தங்கை**
ஜெய்சங்கர், கே. ஆர். விஜயா

✻

**காவல் தெய்வம்**
சிவாஜி, சௌகார் ஜானகி

✻

**மூன்றெழுத்து**
( கலர் )
ரவிச்சந்திரன், ஜெயலலிதா

**தில்லானா மோகனாம்பாள்**
( கலர் )
சிவாஜி, பத்மினி

✻

**திருவருட்செல்வர்**
( கலர் )
சிவாஜி, பத்மினி

✻

**எங்கமாமா**
( கலர் )
சிவாஜி, ஜெயலலிதா

✻

**உயர்ந்த மனிதன்**
சிவாஜி, வாணிஸ்ரீ

✻

**குமரி கோட்டம்**
எம். ஜி. ஆர்., ஜெயலலிதா

✻

**கண்ணன் என் காதலன்**
எம். ஜி. ஆர்., ஜெயலலிதா

✻

**நம் நாடு**
எம். ஜி. ஆர்., ஜெயலலிதா



இன்பம் எளிமை இதயந் தொடும்பொருண்மை
கம்பர் கவியின் கருச்சாயல் — அன்பனார்
தில்லைச் சிவனின் செழும்பாடல் போல்வேறு
சொல்லத் தருமோ சுவை.

அல்லைப்பிட்டி, க. வ. ஆறுமுகம்

வெல்லச் சுவையினையும் வெல்லத் தமிழ்செய்யும்
தில்லைச் சிவனாரின் தீம்பாடல் — சில்லையூர்ச்
செல்வரா சென்னும் சிறியேன் மனந்துயரில்
மல்குங்கால் மாற்றும் மருந்து.

விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம்